வகையில் சத்தியமூர்த்தி சாகர் என்று இந்த நீர்த்தேக்கத்திற்கு பெயரிடப்பட்டது. மேலும் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி தலைமையகத்திற்கு சத்தியமூர்த்தி பவன் எனப் பெயரிடப்பட்டது.

சுதேசி இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்ற இயக்கங்களில் பங்கேற்று, பலமுறை சிறை சென்றுள்ளார். சத்தியமூர்த்தி அரசியல்வாதிகளுள் ஒரு சிறந்த மனிதர். இந்திய விடுதலைக்காகவும், சமுதாய நீதிக்காகவும், மக்கள் நலனுக்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்த சத்தியமூர்த்தி அவர்கள் 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் காலமானார்.

## சி. இராஜகோபாலாச்சாரி

இராஜாஜி என்று புகழப் பெற்ற இராஜகோபாலாச்சாரி, டிசம்பர் – 10, 1878 ஆம் ஆண்டு தொரப்பள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார். சட்டம் பயின்று வழக்கறிஞராக சேலத்தில் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார். 1906ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். 1907ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் கலந்துகொண்டார். காந்தியின் தீவிர ஆதரவாளர் ஆனார். 1930 ஆம் ஆண்டு வேதாரண்யம் சத்தியாகிரகத்தைத் தலைமையேற்று நடத்தினார். தமது தலைமையில் திருச்சியில் இருந்து 100 தொண்டர்களுடன் வேதாரண்யத்திற்கு பயணம் மேற்கொண்டு, கடல் நீரிலிருந்து உப்பு காய்ச்சி உப்புச்சட்டங்களை மீறினார். 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநிலத் தேர்தலில் போட்டியிட்டு சென்னை மாகாண முதலமைச்சரானார். தனது ஆட்சிக்காலத்தில் மதுவிலக்கை அமுல்படுத்தினார். ஆதிதிராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனை மேம்படுத்த பல்வேறுச் சட்டங்களைக் கொண்டுவந்தார். இந்தி மொழியை கட்டாயப் பாடமாக பள்ளிகளில் அறிமுகப்படுத்தினார். இதற்கு கடும் எதிர்ப்பு தோன்றியது. பெரியார் ஈ.வெ.ராமசாமி தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. இரண்டாவது உலகப்போரின் போது ஆங்கில அரசு இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதைக் கண்டித்து, 1939 ஆம் ஆண்டு தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.




சி. இராஜகோபாலாச்சாரி

சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்றார். மீண்டும் தமிழக முதலமைச்சராக 1952 ஆம் ஆண்டு பதவி ஏற்றார். குலக்கல்வித் திட்டத்தை தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார். ஆனால் இதற்கு காமராஜர் மற்றும் பெரியார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே இராஜாஜி தனது முதலமைச்சர் பதவியை 1954 ஆம் ஆண்டு இராஜினாமா செய்தார். பின்னர் காங்கிரசிலிருந்தும் வெளியேறினார். சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்து இளம் இந்தியா என்ற பத்திரிக்கையை நடத்தினார். சக்கரவர்த்தி திருமகன் (இராமாயணம்), வியாசர் விருந்து (மகாபாரதம்) போன்றவை இவர் எழுதிய உரைநடை நூல்களாகும். மற்றும் இவர், கீதை மற்றும் உபநிடதங்களுக்கு உரை எழுதியுள்ளார். 1955–ஆம் ஆண்டு இவருக்கு பாரத ரத்னா விருது

வழங்கப்பட்டது. இவர் டிசம்பர் 25, 1972 ஆம் ஆண்டு காலமானார். இவருடைய அரசியல் தந்திர செயல்களால் **'சாணக்கியர்'** என போற்றப்படுகிறார்..

## காமராஜர்

**கர்ம வீரர்** என்று போற்றப்பட்ட காமராஜர், விருதுபட்டி என்று அழைக்கப்பட்ட விருதுநகரில் ஜுலை 15, 1903 ஆம் ஆண்டு பிறந்தார்.



காமராஜர்

தமிழக விடுதலைப்போராட்ட வீரர்களில் சிறந்தவராக போற்றப்படுகிறார். 1924–ம் ஆண்டு வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டதின் மூலம் சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1929 ஆம் ஆண்டு முதல், காங்கிரஸ் கட்சியின் முழுநேர உறுப்பினரானார். 1930 ஆம் ஆண்டு காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்கியபோது, தமிழகத்தில் இராஜாஜியுடன் சேர்ந்து வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகத்தை மேற்கொண்டார். அதனால் கைது செய்யப்பட்டு இரண்டாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். இருப்பினும் காந்தி–இர்வின் ஒப்பந்தத்தின்படி விடுவிக்கப்பட்டார். 1940–ஆம் ஆண்டு தனது சத்தியாகிரகப் போராட்ட திட்டங்களுக்கு காந்தியிடம் அனுமதி பெற வார்தா பயணமானார். ஆனால் செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்டார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகள் அமராவதி சிறையில் அடைக்கப்பட்டார். 1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்தபோது சத்தியமூர்த்தியின் வீட்டில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார்.

காமராஜர் தமிழக முதலமைச்சராக 9 ஆண்டுகள் பணியாற்றினார். பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார். மதிய உணவுத்திட்டம், புதிய பள்ளிகளைத் திறந்தது, இலவச கல்வி வழங்குதல், வேளாண்மையை மேம்படுத்துதல், கால்வாய்களை வெட்டுதல், அணைகளைக் கட்டுதல் மற்றும் புதிய தொழிற்சாலைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். தேசிய அரசியலில் முக்கிய பங்கு வகித்தார். இதனால் **அரசை உருவாக்குபவர்** எனப் போற்றப்பட்டார். லால்பகதூர் சாஸ்திரியை 1964 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராகவும், அவரது மறைவிற்குப் பிறகு இந்திரா காந்தியை 1966–ம் ஆண்டில் இந்தியப் பிரதமராகவும் உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகித்தார். **காமராஜர் திட்டம் (கே. திட்டம்)** என்ற திட்டத்தின்படி கட்சிப் பணிக்காக தனது பதவியை இராஜினாமா செய்தார் அக்டோபர் 2, 1975 ஆம் ஆண்டில் காலமானார். இவரை மக்கள் அன்போடு **பெருந்தலைவர்** என்றும் **கர்ம வீரர்** என்றும் அழைத்தனர். இவ்வாறாக, இந்தியாவின் சுதந்திர போராட்டத்தில் தமிழ்நாடு முக்கியப்பங்காற்றியது.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. வேலூரில் இந்திய வீரர்களை ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படத் தூண்டியவர்.

   அ) ஹைதர் அலி ஆ) திப்பு சுல்தானின் மகன்கள்

   இ) சிவாஜி ஈ) ஷாஜகான்

2. மக்கள் உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட மதராஸ் மாகாணத்தின் முதல் அமைப்பு.

   அ) இந்திய தேசிய காங்கிரஸ் ஆ) முஸ்லீம் லீக்

   இ) சுயராஜ்ஜிய கட்சி ஈ) சென்னை சுதேசி சங்கம்

3. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர்

   அ) பி.இரங்கையா நாயுடு ஆ) இராஜாஜி இ) காமராஜர் ஈ) பாரதியார்

4. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தியவர்

   அ) டி.எஸ். ராஜன் ஆ) பக்தவச்சலம் இ) இராஜகோபாலாச்சாரி ஈ) வ.உ.சி

5. 1908 ஆம் ஆண்டு பாரதியார் சென்னையில் மாபெரும் பொதுக் கூட்டத்தைக் கூட்டி கொண்டாடியது.

   அ) சுயராஜ்ஜிய நாள் ஆ) பிறந்த நாள்

   இ) குடியரசு நாள் ஈ) சேவை நாள்

6. பிரிட்டிஷாரின் கைது ஆணைக்கு எதிராக பாரதியார் தப்பியோடியது

   அ) சென்னை அ) பெங்களூர் இ) ஹைதராபாத் ஈ) பாண்டிச்சேரி

7. தமிழ்நாட்டில் காங்கிரஸ் தலைமையிடத்தின் பெயர்

   அ) ராஜ்பவன் ஆ) ராஷ்டிரபதி பவன் இ) சத்தியமூர்த்தி பவன் ஈ) விதான் சபா

8. 1940 ஆம் ஆண்டு காமராஜர் வார்தா சென்று சந்திக்க இருந்தது

   அ) நேரு ஆ) காந்திஜி இ) திலகர் ஈ) ஜின்னா

9. தமிழ்நாட்டின் முதலமைச்சராக காமராஜர் பதவி வகித்தது

   அ) 9 வருடங்கள் ஆ) 8 வருடங்கள் இ) 10 வருடங்கள் ஈ) 7 வருடங்கள்

10. காமராஜரின் பிரபலமான கொள்கை

    அ) 'எஸ்' திட்டம் ஆ) 'எல்' திட்டம் இ) 'கே' திட்டம் ஈ) 'ஜெ'திட்டம்

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | சுதேசி பொருட்கள் கண்காட்சி | சிப்பாய் கலகம் |
| 2. | சாணக்கியர் | காமராஜர் |
| 3. | அரசை உருவாக்குபவர் | பூண்டி நீர் தேக்க நிலை |
| 4. | சத்திய மூர்த்தி | வேலூர் கலகம் |
| 5. | பதேக் ஹைதர் | பெரியார் ஈ.வே.ரா |
| | | சென்னை மகாஜன சபை |
| | | இராஜாஜி |

## இ. சுருக்கமாக விடையளி.

1. வேலூர் கலகம் – குறிப்பு வரைக.
2. திருப்பூர் குமரன் பற்றி உமக்கு என்ன தெரியும் ?
3. சுப்பிரமணிய சிவா பற்றி எழுதுக.
4. சுதந்திர போராட்டத்தில் வாஞ்சிநாதனின் பங்கு பற்றி எழுதுக.
5. 1907 ஆம் ஆண்டு பாரதியார் வெளியிட்ட பத்திரிக்கைகளை குறிப்பிடுக.
6. சுப்பிரமணிய பாரதியாரின் ஒரு சில பாடல்களை எழுதுக.
7. மேயராக சத்தியமூர்த்தியின் சேவைகள் யாவை ?
8. காமராஜரின் நலத்திட்டப் பணிகள் பற்றி குறிப்பு வரைக.
9. அரசை உருவாக்குபவர் என காமராசர் கருதப்படுவது ஏன் ?

## ஈ. பின்வரும் தலைப்புகளின் கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. சி. இராஜகோபாலச்சாரி

   அ) இராஜகோபாலாச்சாரி எங்கு பிறந்தார் ?

   ஆ) 1939ம் ஆண்டு இராஜகோபாலாச்சாரி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தது ஏன் ?

   இ) இவர் தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்திய திட்டம் யாது ?

   ஈ) சாணக்கியர் என்று அழைக்கப்படுவது ஏன் ?

2. கே. காமராஜர்

   அ) காமராஜர் எப்படி அரசியலில் நுழைந்தார் ?

   ஆ) 1930 ல் எங்கு சிறையில் அடைக்கப்பட்டார் ?

   இ) 1947ம் ஆண்டு இந்திய தேசிய கொடியை எங்கு ஏற்றினார் ?

   ஈ) காமராஜர் எப்பொழுது இறந்தார் ?

## உ. விரிவான விடையளி.

1. சென்னை மகாஜன சபையின் பணியினை விவிரி.
2. பாரதியார் ஒரு சுதந்திர போராட்ட வீரர்–நிரூபி.

# 14. தமிழ்நாட்டில் சமுதாய மாற்றங்கள்

19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, பாலகங்காதர திலகர், இராஜாஜி போன்ற தேசத் தலைவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தங்களை முழுமையாகத் அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றி வந்தனர். தமிழ்நாட்டில் பல்வேறு தலைவர்கள் அரசியல் சுதந்திரத்திற்கு மட்டுமல்லாமல் சமூக விடுதலைக்கும் போராடி வந்தனர். அரசியல் சுதந்திரம் என்பது சமூக நீதி, சுயமரியாதை மற்றும் கௌரவம் இல்லையெனில் அர்த்தமற்றது என்று அவர்கள் கருதினர்.

## நீதிக்கட்சி

தென்னிந்திய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை மாகாணத்தில் நீதிக் கட்சியின் ஆட்சி குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது. நீதிக்கட்சி, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக பிராமணர்கள் அல்லாதவர்களால் தொடங்கப்பட்ட சமூக இயக்கமாகும்.



டி.எம். நாயர்

நீதிக்கட்சி என்றழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைக்கழகம் ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை மாகாணத்தில் தோன்றிய அரசியல் கட்சியாகும். இக்கட்சி 1916 ஆம் ஆண்டு டி.எம்.நாயர் மற்றும் தியாகராயசெட்டி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. நீதிக்கட்சி தொடக்க காலத்தில் கோரிக்கை மனுக்கள் மூலம் பிராமணர் அல்லாதவர்களுக்கு நிர்வாகத்தில் அதிக பிரதிநிதித்துவம் கோரியது. இக்கட்சி தமிழில் 'திராவிடன்', தெலுங்கில் 'ஆந்திர பிரகாசிகா' மற்றும் ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' என்ற பத்திரிக்கையையும் அச்சிட்டு வெளியிட்டது. எனவே, இக்கட்சி நீதிக்கட்சி (Justice Party) என்றழைக்கப்பட்டது.



தியாகராய செட்டியார்

## நீதிக்கட்சியின் ஆட்சி

1920 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி திரு. சுப்பராயலு தலைமையில் ஆட்சி அமைத்தது. 1923 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. 1926 ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க மறுத்துவிட்டது. எனவே சுயேட்சை வேட்பாளரான திரு.சுப்பராயலு, சுயராஜ்ஜியக் கட்சியின்

உதவியுடன் ஆட்சி அமைத்தார். 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று ப.முனிசாமி நாயுடு தலைமையில் ஆட்சி அமைத்தது. ஆனால் 1932 ஆம் ஆண்டு இவரை பதவி நீக்கிவிட்டு, பொப்பிலி இராஜா பதவியேற்றார். 1934 ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க மறுத்து விட்டது. எனவே நீதிக்கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தது. 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வியடைந்து மீண்டும் எழவேயில்லை. பெரியார் மற்றும் அவரது சுய மரியாதை இயக்கத்தின் கட்டுப்பாட்டில் சிறிது காலம் நீதிக்கட்சி செயல்பட்டது. 1944–ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த மாநாட்டில் பெரியார் நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என மாற்றம் செய்து அதை ஒரு சமுதாய இயக்கமாக மாற்றினார். இதன் மூலம் நீதிக்கட்சி அரசியல் இயக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.

## நீதிக்கட்சியின் சாதனைகள்

நீதிக்கட்சியின் ஆட்சி சாதி அடிப்படையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு மற்றும் மதச் சீர்திருத்தங்களுக்காக அனைவராலும் நினைவு கூறப்படுகிறது. இந்திய அரசியலில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்பேற்று, பல பிரச்சனைகளை மன உறுதியோடு சந்தித்து, சிறிது காலம் நல்லாட்சி வழங்கியது. பொருளாதாரம் மற்றும் சமூக சீர்த்திருத்தங்கள் மூலம் கிராமங்கள் முன்னேற்றம் என்ற புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தியது.

நீதிக்கட்சி அனைத்து சமூகத்தினரும் சமமான பிரதிநிதித்துவம் பெற வழிசெய்து தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தியது.

சமூக அரசாணை 1921 மற்றும் 1922 மூலம் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.

எதேச்சதிகாரம், செல்வாக்கு, அனுகூலத் தேர்வு முறையை ஒழிக்க, 1924 ஆம் ஆண்டு பணியாளர் தேர்வு வாரியத்தை ஏற்படுத்தியது. இது 1929 ஆம் ஆண்டு பொதுப் பணி தேர்வாணையமாக மாறியது.

உயர்கல்வி நிலையங்களை நெறிப்படுத்துவதற்காகவும், அனைத்து சமூகத்தினரும் பயன்பெறவும் கல்லூரிக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

1925 ஆம் ஆண்டு ஆந்திரா பல்கலைக்கழகம் மற்றும் 1929 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழகமும் தொடங்கப்பட்டன.

கோவில் வரவு – செலவுக் கணக்குகளை முறைப்படுத்த, கோயில் குழுக்கள் அமைக்கப்பட்டன. 1926 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1921 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. பெண்கள் வன் கொடுமைத் தடைச்சட்டம் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் தியாகராயச் செட்டியாரால் இலவச மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.

இக்கட்சி ஆயுர்வேதம், சித்தமருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது.

## நீதிக்கட்சியின் வீழ்ச்சி

1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியடைந்தது. ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று, தமிழ்நாட்டில்

அமைச்சரவை அமைத்தது. நீதிக்கட்சி அதன் வீழ்ச்சியிலிருந்து எழவேயில்லை. இதற்கு பல காரணங்கள்.

• உலகில் பொருளாதார பெருமந்தம் நிலவியிருந்த காலத்தில் இக்கட்சி பொறுப்பேற்றது. இதனால் இக்கட்சியால் நிலைக்கமுடியவில்லை.

• தேசிய இயக்கம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்ததால் நீதிக்கட்சின் செல்வாக்கு சரியத்தொடங்கியது.

• சாதி மற்றும் பணம் செல்வாக்கு பெறத்தொடங்கியதால் நீதிக்கட்சி பலவீனமடைந்தது.


• காந்தியடிகள் தலைமையில் காங்கிரஸ் கட்சி பலம்பெற்று விளங்கியது. இது நீதிக்கட்சிக்கு பெரும் சவாலாக அமைந்தது. எனவே நீதிக்கட்சியின் செல்வாக்கு சரியத்தொடங்கி, தோல்வியைத் தழுவியது.

## சுய மரியாதை இயக்கம்

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சமூக சீர்த்திருத்தவாதி பெரியார் ஈ.வே.இராமசாமி ஆவார். மக்கள் மனதில் சுயமரியாதை, பகுத்தறிவு, பெண் விடுதலை, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் ஆகியவற்றிற்கு வித்திட்டவர் பெரியார்.

ஈ.வே. இராமசாமி, 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் ஈரோட்டில் செல்வ வளம் மிக்க இந்து குடும்பத்தில் பிறந்தார். தமது 13ஆம் வயதில் திருமணம் செய்து கொண்ட பெரியார், தனது 19 வது வயதில் இல்லற வாழ்வைத் துறந்தார். துறவறம் பூண்டு காவி உடை தரித்து, பல புனித இடங்களுக்குச் சென்றுவந்தார். இவர் காசி சென்றிருந்த போது பார்ப்பனர்கள் மற்ற இனத்தவர்களை இழிவுபடுத்துவதை நேரடியாகக் கண்டு அதனைக் கடுமையாக கண்டித்தார். பின்னர் தமிழ்நாட்டிற்குத் திரும்பி, தமது கொள்கைகளைப் பரப்புவதற்காக 1919 ஆம் ஆண்டு காங்கிரசில் இணைந்தார். 1921 ஆம் ஆண்டு சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைமை நிர்வாகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1923 ஆம் ஆண்டு அதன் தலைவரானார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். 1924 ஆம் ஆண்டு, கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தை தளர்த்தி, அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது. இதன் காரணமாக பெரியாருக்கு **'வைக்கம் வீரர்'** என்ற பட்டம் வழங்கப்பட்டது.



ஈ.வே. இராமசாமி

காங்கிரசின் நிதியுதவியுடன் சேரன்மாதேவி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட குருகுலம் பள்ளியை பெரியார் பார்வையிட்டார். அப்பள்ளியில் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனித்தனியே உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது. இதனைக் கண்டு கொதித்தெழுந்த பெரியார், அத்திட்டத்தைக் கண்டித்ததோடு தனது சென்னை மாநில காங்கிரசுத் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார். காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநில மாநாட்டில் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு அரசுப்பணியில் இட ஒதுக்கீடு வழங்கும் தீர்மானத்தை

கொண்டுவந்தார். காங்கிரஸ் கட்சி அதை ஏற்க மறுத்ததால், பெரியார் அம்மாநாட்டிலிருந்து வெளியேறினார். தனது கொள்கைகளை பரப்பவும், அதனை நடைமுறைப் படுத்துவதற்காகவும் 1925ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

### நோக்கங்கள்

• சுயமரியாதை இயக்கம் மதம், ஜாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தது.

• மூடநம்பிக்கைகளையும், பழமை வாதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டது.

• பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத்திருமணம் மற்றும் குழந்தைத் திருமணமுறை ஒழிப்பு ஆகியவற்றிற்காகக் குரலெழுப்பியது.

### சாதனைகள்

பெரியார், அர்த்தமற்ற கொள்கைகள், மூடநம்பிக்கைகள் மற்றும் நம்பகத் தன்மையற்ற புராணக் கதைகளை கண்டித்து பொது மேடைகளில் பேசினார். அவர் தனது சுயமரியாதைக் கொள்கைகளை, குடியரசு, புரட்சி மற்றும் விடுதலை போன்ற பத்திரிகைகளின் மூலம் பரப்பினார். இவர் சமுதாயத்தில் நிலவிய தீமைகளைப் பற்றி பல புத்தகங்கள் வெளியிட்டார்.

பெரியார் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அவர்களின் வாழ்க்கை முறைகளைக் கண்டறிந்தார். ஏழ்மையே சமுதாயத்தில் நிலவும் தீமைகள் அனைத்திற்கும் காரணம் என்பதை உணர்ந்தார். தாய்நாடு திரும்பியவுடன், 14 அம்ச சோஷலிச அறிக்கையினை வெளியிட்டார். நீதிக்கட்சி இதனை ஏற்றுக்கொண்டு அதனைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டது.

பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும், மக்களின் ஆரோக்கிய வாழ்விற்காகவும் குடும்பக் கட்டுப்படு திட்டத்தை அறிவுறுத்தினார். தமிழ் எழுத்து சீர்த்திருத்தத்தைக் கொண்டுவந்ததோடு மட்டுமல்லாமல் எளிமையாகக் கல்வி கற்க ரோமானிய எழுத்து முறையைப் பின்பற்றவும் அறிவுறுத்தினார். இவருக்கு சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி தோல்வியைத் தழுவியது. இதனால் நீதிக்கட்சியின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாயிற்று. 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி 'திராவிடர் கழகம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.


பெரியாரின் ஆசைகளை தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகள் நிறைவு செய்து வருகின்றன.

### சி.என். அண்ணாதுரை

தமிழக மக்களால் அன்புடன் பேரறிஞர் அண்ணா என்று அழைக்கப்படும் சி.என்.அண்ணாதுரை , 1909 ஆம் ஆண்டு, செப்டம்பர் 15 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் தனது எம்.ஏ பட்டத்தை, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முடித்தார். இவர் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நிறுவனர் ஆவார். அண்ணா, நீதிக்கட்சியின் வாயிலாக அரசியலில் நுழைந்தார். சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்ற தாக்கமே இவரை நீதிக்கட்சியில் இணைய வைத்தது. இவர் சாதி மற்றும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் தன்னை நீதிக்கட்சியில் இணைத்துக் கொண்டார்.

அண்ணா ஒருசிறந்த பேச்சாளர். அக் காலத்தில் புகழ்பெற்ற பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். நீதிக்கட்சியில் இணைந்த போது பெரியாரின் தலைமையின் கீழ் பணிபுரியும் பாக்கியம் கிடைத்தது. நீதிக்கட்சி இவருக்கு சரியான பாதையைக்காட்டி சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபடச்செய்தது. இதன்மூலம் சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் பணியைத் தொடங்கினார்.

தமிழ் மொழி மீது அதிக பற்று கொண்ட அண்ணா, காஞ்சிபுரத்தில் பெரியாரால் துவங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு



சி.என். அண்ணாதுரை

மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கெதிராக குரல் எழுப்பினார். நன்கு வளர்ச்சியடைந்த தமிழின் இடத்தை இந்தி ஒரு போதும் எடுத்துக் கொள்ள முடியாது என்றும் முழங்கினார்.

1944 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என மாற்றம் செய்ய தீர்மானம் கொண்டு வந்தார். இதன் மூலம் பெரியாருக்கு மிகவும் நெருக்கமானார். 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார்–மணியம்மை திருமணம் திராவிடக் கட்சிக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. இத்திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்ணா அவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி, 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் புதிய கட்சியைத் தொடங்கினார். திராவிட முன்னேற்ற கழகத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளை அண்ணா தெளிவாக எடுத்துரைத்தார். இவர்கட்சியின் பொதுச்செயலாளர் ஆனார்.

1967– ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று, அண்ணா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தனது ஆட்சிக்காலத்தில் படி அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். (ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி). ஆனால் நிதி நெருக்கடியால், இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த இயலவில்லை. அண்ணா தமிழ் மொழி வளர்ச்சித் திட்டத்தைத் அறிவித்தார்.

சித்திரை முதல் தேதியை தமிழ் புது வருட நாளாக அறிவித்தார். (14.04.1967) 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழக அரசு அல்லது தமிழகம் என பெயர்மாற்றம் செய்தார்.

புனித ஜார்ஜ்கோட்டையில் அமைந்துள்ள செக்ரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் எனப் பெயர் மாற்றம் செய்தார். அதே தேதியில் சத்யமேவ ஜெயதே என்ற அரசுக் குறிக்கோளை வாய்மையே வெல்லும் என்று மாற்றி அறிவித்தார். இதுபோன்று ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் குமாரி போன்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு, திருமதி மற்றும் செல்வி என்ற தமிழ் சொற்களை அறிவித்தார்.

அண்ணாவின் தலைமைப்பண்பு, நிர்வாக நேர்மை, அரசியல் பண்பாடு ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1968ஆம் ஆண்டு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அண்ணாவைப் பாராட்டியது. இத்தகைய பெருமைமிகு அண்ணாதுரை, பிப்ரவரி 3, 1969–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

## சமுதாய மாற்றத்தில் பெண்களின் பங்கு

சீர்திருத்தம் என்பது சமூகத்தில் பல நூற்றாண்டுகளாக வேரூன்றிக்கிடக்கும் சமுதாய கொடுமைகளை ஒழிப்பதாகும். இச்சீர்கேடுகள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தடைக்கற்களாக அமைந்துள்ளன.

இந்த சமுதாய மாற்றங்களைக் கொண்டு வர, ஆண்கள் மட்டுமல்லாமல்

பெண்களும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். அவர்களுள் சிலரது பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

சமுதாய மாற்றத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ் சமூகத்தில் கரும்புள்ளிகள் போல சில சீர்கேடுகள் காணப்பட்டு அவை நீக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தேவதாசி முறையாகும். இந்த சமூக அவலத்தைப் போக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தீவிரமாக போராடிய பெண்மணிகளில் முக்கியமானவர்களில் ஒருவராவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஜூலை 30, 1886 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் பிறந்தார். இந்தியாவின் முதல் பெண் மருத்துவராவார். 1923ஆம் ஆண்டு இவரது தங்கை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். அதனால் புற்று நோயை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று சபதம் மேற்கொண்டார். எனவே 1949 ஆம் ஆண்டு புற்றுநோய் நிவாரண மருத்துவமனையை தொடங்கினார். இவரது சீரிய முயற்சியால் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்த மருத்துவமனைக்கான அடிக்கல்லை நாட்டினார்.

டாக்டர் முத்துலட்சுமி மருத்துவம் மட்டுமின்றி அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் காணப்பட்ட கொடிய பழக்கமான தேவதாசி முறையை ஒழிக்க தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

தேவதாசி முறை ஒழிப்பில் ஆர்வம் கொண்டிருந்ததால், மகாத்மா காந்தி இவரது சமூக பணிகளை வெகுவாக பாராட்டியுள்ளார் தேவதாசி முறை ஒழிப்பில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக 1929 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். தந்தை பெரியார்,



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இவரது கருத்தைத் தீவிரமாக ஆதரித்தனர். இதன் விளைவாக நீதிக்கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது.

1930 ஆம் ஆண்டு பூனாவில் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டை நடத்தினார். 1933 முதல் 1947 வரை இடையில் இரு வருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாதர் சங்கத் தலைவியாக இருந்தார். ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு தரும் பொருட்டு அவ்வை இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை சாந்தோமில் தொடங்கினார். தற்சமயம் இவ்வில்லம் சென்னை அடையாறில் செயல்பட்டு வருகிறது. இலட்சிய வேட்கை கொண்ட எந்தப் பெண்ணுக்கும் தோல்வி இல்லை என்பதை வாழ்ந்து நிரூபித்த டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி 1968 ஆம் ஆண்டு தனது 82–வது வயதில் இந்த உலக வாழ்வைத் துறந்தார்.

### டாக்டர் எஸ். தர்மாம்பாள்

படிப்பு, பதவி, பணம், அந்தஸ்து இவை எதுவுமே இல்லாமல், மக்களுக்குச் சேவை செய்து மனிதாபிமானம் என்ற குணத்தின்

மூலம் பலர் புகழ் பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவராக டாக்டர் எஸ்.தர்மாம்பாள் கருதப்படுகிறார். சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட தர்மாம்பாள் சித்த மருத்துவம் பயின்று சென்னையில் மருத்துவமனை ஒன்றை தொடங்கினார். பின்னர் பொதுச்சேவையில் ஈடுபட்டார். தஞ்சாவூருக்கு அருகில் கருந்தட்டான்குடி என்ற இடத்தில் பிறந்தார்.

தந்தை பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இவர் விதவைகள் மறுமணம், கலப்பு மணம் மற்றும் பெண் கல்வி போன்றவற்றில் ஆர்வம் காட்டினார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், தமிழ் இசை வளர்ப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறை தண்டனை பெற்றார். 1940 ஆம் ஆண்டுவரை சமுதாயத்தில் தமிழாசிரியர்களுக்கு மதிப்பு இல்லை. ஊதியம் உயர்த்தப்படவில்லை. எனவே இழவு வாரம் என்ற போராட்டத்தை தொடங்கினார். இதன் விளைவாக கல்வி அமைச்சராகஇருந்த திரு.அவிநாசிலிங்கம் செட்டியார் பிற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தைத் தமிழ் ஆசிரியர்களுக்கும் வழங்க உத்தரவிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தமிழறிவை வளர்க்கவும், அரசுத் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறவும், பேச்சாற்றல், எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளவும் சென்னை மாணவர் மன்றம் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றினார்.

இவர் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி 'வீரத்தமிழன்னை' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டம் பெற்ற தருமாம்பாள் ஈ.வே ராமசாமி நாயக்கருக்கு பெரியார் என்ற பட்டத்தையும், எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு ஏழிசை மன்னர் என்ற பட்டத்தையும் வழங்கினார்.

தனது உழைப்பு, சிந்தனை அனைத்தையும் தமிழ் மொழி, தமிழிசை, தமிழ் மக்கள் இவற்றுக்காக அர்ப்பணித்த அம்மையார் தனது 69வது வயதில் 1959 ஆம் ஆண்டு காலமானார்..

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் தோன்றிய பெண் சீர்திருத்தவாதிகள் பெரும்பாலானவர்கள் தேச விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். இதில் சிலர் தேச விடுதலையோடு சமூக விடுதலைக்கும் பாடுபட்டனர். அவர்களில் மிக முக்கியமானவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். 1883–ஆம் ஆண்டு திருவாரூரில் பிறந்த இவர் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள மூவலூர் கிராமத்தில் வளர்ந்தார். எனவே மூவலூர் இராமாமிர்தம் என்றழைக்கப்பட்டார்.

இவர் இசை வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். பழங்காலத்தில் இக்குலத்தில் பிறந்த பெண்கள் இறைப்பணி மற்றும் கலைப்பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டனர். இச்சமூகம் காலமாற்றத்தில் சிக்கிச் சீரழிந்தது. பிரபுக்கள் மற்றும் ஜமீன் தார்களால் அவமானப்படுத்தப்பட்டனர்.

தம் குலத்துப் பெண்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதையும், பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதையும் உணர்ந்த இராமாமிர்தம் அம்மையார், அவர்களின் விடுதலைக்காக தனது வாழ்வை அர்ப்பணிக்க முடிவு செய்தார். நாடு முழுவதும் தங்கள் இனப் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துச் சொல்லி, அவர்களது விடுதலைக்கு ஆதரவு திரட்டினார்.

காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். 1925 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் இசை வேளாளர் மாநாட்டைக் கூட்டினார். இம்மாநாட்டில் தமிழறிஞர் திரு.வி.க. பெரியார், மயூரமணி சின்னையா பிள்ளை,

எஸ்.இராமநாதன் போன்றோர் கலந்துகொண்டனர். இவர்கள் தேவதாசி முறைக்கு எதிராகக் குரலெழுப்பினர். இது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர ஆணிவேராக அமைந்தது.

தேவதாசி முறைக்கு எதிரான இவரது போராட்டம் தமிழகப் பெண்களை மட்டுமல்லாது தேசிய அளவிலும் பெண்களை விழிப்படையச் செய்தது.

சமூகப்பணிகளில் மட்டுமல்லாமல் தேசிய இயக்கத்திலும் தன்னை இணைத்துக் கொண்ட அம்மையார், பெண்கள் பெருமளவில் தேசிய இயக்கத்தில் ஈடுபட ஊக்குவித்தார். தந்தை பெரியார், இராஜாஜி, திரு.வி.க. இவர்களின் உறுதுணையால் இவர் சிறப்பாக செயலாற்றினார்.

இவரது அரிய உழைப்பையும், தியாகத்தையும் போற்றும் வகையில் தமிழக அரசு, ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியளிக்கும் ஒரு சமூகத் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் நினைவு திருமண உதவித் திட்டம் என்று பெயரிட்டு இவரைக் கௌரவித்தது.

எந்த உயர்ந்த இலட்சியத்துக்காகப் பொது வாழ்வில் ஈடுபட்டாரோ, அந்த இலட்சியம் முழுமையாக நிறைவேறியதைக் கண்குளிரக் கண்டு அனுபவித்த பிறகு 1962 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் தேதி இந்த உலகை விட்டு மறைந்தார்.

பரம்பரை பரம்பரையாக வரும் பழக்கங்கள் நிறைந்த தமிழ் சமுதாயம் இன்றளவும் அதனுடைய பழைய மதிப்புகளைக் கொண்டுள்ளது. 1856 இல் விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்ட போதிலும் இன்றும் விதவைகள் சமுதாய விழாக்களில் புறக்கணிக்கப்படுகின்றனர். 20 ஆம் நூற்றாண்டில் நீதிக் கட்சி மற்றும் சுயமரியாதை இயக்கங்கள் கொண்டு வந்த சமுதாய முன்னேற்றக் கொள்கைகள் சட்டங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு விதவை மறுமணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகத் தமிழகத்தில் மாறியது. சதி ஒழிப்பு, விதவைகள் திருமணம் மற்றும் குழந்தைகள் திருமணம் ஒழிப்பு போன்றவை தமிழக வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

சாதி ஏற்றத் தாழ்வு சமுதாயத்தில் மற்றுமொரு குறைபாடு ஆகும். ஆலய நுழைவு இயக்கம் இதற்கு ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

கோவில்கள் ஒரு காலத்தில் உயர்சாதியினருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. அங்கு தாழ்ந்த சாதியினர் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. சீர்திருத்தவாதிகளான ஈ.வே.இராமசாமி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, வள்ளலார், பாரதி, பாரதிதாசன்,மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் மற்றும் டாக்டர் எஸ். தர்மாம்பாள் போன்றோர் இத்தகைய சமுதாய தீய பழக்க வழக்கங்களை ஒழிக்கப் போராடினார்கள். இவ்வாறு பெண்கள் தமிழக சமுதாய மாற்றத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளனர்.

## பயிற்சி

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. தென்னிந்திய நல உரிமைக் கழகத்தை இவ்வாறும் அழைக்கலாம்.

அ) திராவிடக் கட்சி ஆ) ஜனதா கட்சி இ) தெலுங்கு தேசம் ஈ) நீதிக் கட்சி

2. நீதிக் கட்சியை பெரியார் மாற்றி அமைத்தது

அ) அகாலி தள் ஆ) பாட்டாளி மக்கள் கட்சி இ) திராவிடர் கழகம் ஈ) சுயராஜ்யம்

3. தமிழ்நாட்டின் தலை சிறந்த சமுதாய சீர் திருத்தவாதி

அ) ஈ.வே. ராமசாமி ஆ) நேரு

இ) காந்தி ஈ) ராஜாராம் மோகன் ராய்

4. வைக்கம் அமைந்துள்ள இடம்

அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம் இ) கர்நாடகம் ஈ) கேரளா

5. சி.என். அண்ணாதுரை மக்களால் அன்போடு அழைக்கப்படுவது

அ) சாச்சா ஆ) நேதாஜி இ) அண்ணா ஈ) பெரியார்

6. திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்தவர்

அ) சி.என். அண்ணாதுரை ஆ) எம். கருணாநிதி

இ) காமராஜர் ஈ) எம்.ஜி. ராமச்சந்திரன்

7. சி.என். அண்ணாதுரைக்கு முனைவர் பட்டம் வழங்கியது

அ) அண்ணா பல்கலைக் கழகம் ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இ) மணிப்பால் பல்கலைக் கழகம் ஈ) பாரதியார் பல்கலைக் கழகம்

8. டாக்டர்.முத்துலட்சுமியின் சீரிய முயற்சியால் புற்றுநோய் மருத்துவமனை தொடங்கப்பட்ட இடம்

அ) அண்ணா நகர் ஆ) செங்கல்பட்டு

இ) காஞ்சிபுரம் ஈ) அடையார்

9. அகில இந்திய மகளிர் மாநாடு நடைபெற்ற இடம்

அ) பூனா ஆ) பம்பாய் இ) தானா ஈ) சதாரா

10. டாக்டர். முத்துலட்சுமியால் தொடங்கப்பட்ட அனாதை இல்லம்

அ) அன்பு இல்லம் ஆ) சரஸ்வதி இல்லம்

இ) அவ்வை இல்லம் ஈ) லட்சுமி இல்லம்

11. டாக்டர். எஸ்.தருமாம்பாள் தமிழ் ஆசிரியருக்காக நடத்திய போராட்டம்.

அ) நல்ல வாரம் ஆ) இந்தி வாரம் இ) தமிழ் வாரம் ஈ) இழவு வாரம்

12. மூவலூர் இராமாமிர்தம் பிறந்த ஆண்டு

அ) 1885 ஆ) 1887 இ) 1889 ஈ) 1883

## ஆ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. நீதி | ஈ.வே.ராமசாமி பெரியார் |
| 2. வைக்கம் வீரர் | டாக்டர்.எஸ்.தருமாம்பாள் |
| 3. தேவதாசி முறை | மூவலூர் இராமாமிர்தம் |
| 4. வீரத் தமிழன்னை | டி.எம். நாயர் |
| 5. நீதிக்கட்சி | சத்திய மூர்த்தி |
| | டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி |
| | ஆங்கில செய்தித்தாள் |

## இ. சுருக்கமான விடையளி.

1. நீதிக்கட்சியின் ஆட்சிப் பற்றி சுருக்கமாக விடையளி.
2. சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் யாவை ?
3. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார் ?
4. தமிழக முதலமைச்சராக சி.என்.அண்ணாதுரை ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.
5. தேவதாசி முறை ஒழிப்பிற்கு முத்துலட்சுமி ரெட்டியின் போராட்டத்தை விளக்கு.
6. தமிழ் ஆசிரியர்களுக்காக டாக்டர். எஸ். தர்மாம்பாளின் தொண்டினை விளக்கு.
7. மூவலூர் இராமாமிர்தம் தனது சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகளைப் பற்றி எழுதுக.

## ஈ. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. நீதிக்கட்சி

அ) நீதிக்கட்சியை தோற்றுவித்தவர் யார் ?

ஆ) நீதிக்கட்சி எப்பொழுது ஆட்சிக்கு வந்தது ?

இ) நீதிக்கட்சி எப்பொழுது தோற்கடிக்கப்பட்டது.

ஈ) நீதிக்கட்சியின் சாதனைகள் இரண்டினை எழுது.

2. சுயமரியாதை இயக்கம்.

அ) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் யார் ?

ஆ) சுயமரியாதை இயக்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது ?

இ) இந்த இயக்கம் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?

ஈ) சுயமரியாதை இயக்கத்தின் தொடர் போராட்ட விளைவாக அரசு இயற்றிய சட்டங்களை எழுது.

## உ. பத்தி விடையளி.

1. நீதிக்கட்சியின் தோற்றம் மற்றும் சாதனைகளை பற்றி ஒரு பத்தியில் விடையளி.
2. தமிழ் சமுதாயத்திற்கு டாக்டர்.முத்துலட்சுமி ஆற்றிய தொண்டுகள் அளவிடமுடியாதவை– நிருபிக்க.
3. மூவலூர் ராமாமிர்தம் ஒரு சுதந்திர போராட்ட வீரர் மற்றும் ஒரு சமூக சீர்திருத்தவாதி– இக்கூற்றை நிரூபி.

# புவியியல்


## 1. இந்தியா – அமைவிடமும் இயற்கை அமைப்பும்

### அமைவிடம்

இந்தியா தெற்கு ஆசியக்கண்டத்தின் வளமையான நாகரீகம் கொண்ட மிகப்பெரிய நாடு ஆகும். இது பாரம்பரியம் மிக்க மதச் சகிப்புத் தன்மையாலும், காலவரையறையற்ற பண்பாட்டை பேணுதலாலும் மற்ற உலக நாடுகளை தன்பால் ஈர்த்து வியக்கச் செய்கிறது. இந்தியக் கலாச்சாரத் தாக்கம் இந்திய எல்லையையும் தாண்டி வெகுகாலத்திற்கு முன்னரே கிழக்கு ஆசிய, தென் கிழக்கு ஆசிய நாடுகளை அடைந்துள்ளது.

உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளுக்கும் இடையே இந்தியா ஒரு பாலமாக அமைந்து கீழை நாடுகளையும், மேலை நாடுகளையும் இணைக்கிறது. இந்தியா தமது கலாச்சாரத்தினால் எவ்வளவு பலம் பெற்றுள்ளதோ அவ்வளவு பலத்தை தமது புவியியல் அமைப்பாலும் பெற்றுள்ளது. வரலாற்றுக் காலத்தில் இந்தியா, "பாரதம்" என்றும் "இந்துஸ்தான்" என்றும் அழைக்கப்பட்டது. முற்காலத்தில் வலிமை வாய்ந்த அரசனாக இருந்த பரதன் என்பவரைப் பின்பற்றி இந்தியாவை பாரதம் என்றும் சிந்து ஆற்றின் பெயரால் "இந்துஸ்தான்" என்றும் அழைக்கப்பட்டது. இதன் பின் வந்த ஐரோப்பியர்கள் 'சிந்து' என்ற சொல்லின் அடிப்படையிலேயே இந்தியா என்று பெயரிட்டனர். தற்பொழுதும் இந்தியா என்ற பெயரால் மற்ற நாடுகளால் அழைக்கப் பட்டு வருகிறது.

உலகில் இந்தியாவின் அமைவிடம்



## இந்தியா, ஒரு துணைக் கண்டம்

கண்டம் என்பது பல்வேறு வகையான

1) இயற்கை அமைப்புகளையும்

2) காலநிலைகளையும்

3) இயற்கைத் தாவரங்களையும்

4) கலாச்சாரக் கூறுகளையும்

5) பல்வேறு இனங்களையும் மொழிகளையும்

6) மிகப்பரந்த நிலப் பரப்பையும் கொண்டதாகும்.

ஒரு கண்டத்திற்குரிய மேற்கண்ட பண்புகள் அனைத்தும் இந்தியாவில் காணப்படுவதால், இந்தியாவை 'ஒரு துணைக் கண்டம்' என்று அழைக்கிறோம்.

### நினைவு கூறுவோம் !


அட்சக்கோடுகளும், தீர்க்கக் கோடுகளும் ஓர் இடத்தின் அமைவிடத்தை அறிந்துகொள்ள உதவுகின்றன.

## அமைவிடமும் பரப்பளவும்

இந்தியா 8° 4' வட அட்சம் முதல் 37° 6' வட அட்சம் வரையிலும் 68° 7' கிழக்கு தீர்க்கம் முதல் 97° 25' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது. 23½° வடக்கு அட்சமான கடகரேகை இந்தியாவின் குறுக்காக சென்று நாட்டை வெப்ப மண்டலம், மித வெப்ப மண்டலம் என இரு பகுதிகளாக பிரிக்கின்றது.

இந்தியா 32,87,263 ச.கி.மீ பரப்பளவை கொண்டுள்ளது. 2011 ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1.2 பில்லியன் மக்கள்தொகையை பெற்றுள்ளது. இந்தியா வடக்கே காஷ்மீர் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை 3214 கி.மீ.

### இந்தியாவும் அதன் எல்லைகளும்



நீளத்தையும், மேற்கே குஜராத் முதல் கிழக்கே அருணாசலப்பிரதேசம் வரை 2933 கி.மீ. அகலத்தையும் கொண்டுள்ளது. இந்தியக் கடற்கரையின் நீளம் 6000 கி.மீ. அந்தமான் நிக்கோபார், இலட்சத் தீவு கடற்கரையையும் சேர்த்து 7516 கி.மீ. நீளம் கொண்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுடன், சூயஸ் கால்வாய் வழியாகவும், சீனா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுடன் மலாக்கா நீர்ச்சந்தி வழியாகவும், வணிகம் மற்றும் பொருளாதார செயல்களில் ஈடுபட இந்தியாவின் அமைவிடம் ஏதுவாக உள்ளது.

**இந்தியாவின் உருவ அளவை நினைவில் கொள் !**

ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நாடு இந்தியா. இது பாகிஸ்தானைவிட 4 மடங்கு பெரியது. ஜப்பானை விட 8 மடங்கு பெரியது. இங்கிலாந்தைவிட 12 மடங்கு பெரியது. ஆனால், ஐக்கிய அமெரிக்க நாட்டை விட 3 மடங்கு சிறியது.

### இந்தியத் திட்டநேரம்

தீர்க்கக் கோடுகள் ஓர் இடத்தின் நேரத்தைக் கணக்கிடப் பயன்படுகின்றது. இந்தியாவின் நடுவே அலகாபாத் வழியாகசெல்லும் $82^{0}30'$ கிழக்குத் தீர்க்கம் இந்தியத் திட்ட நேரத்தை கணக்கிட உதவும் தீர்க்கமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்தியத் திட்ட நேரம் கிரின்விச் $0^{0}$ தீர்க்கநேரத்தைவிட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்திற்குப்பின் இந்திய அரசு நாடு முழுமைக்குமான அலுவலக நேரமாக இந்திய திட்ட நேரத்தையே பயன்படுத்தி வருகிறது.

**இந்தியத் திட்ட நேரத்தை கடைபிடிக்க வேண்டிய காரணங்களை அறிவாயா ?**

இந்தியாவின் கிழக்கு மேற்கு பரவல் சுமார் $29^{0}$ தீர்க்கங்களைக் கொண்டது. இம்மிகப்பெரிய தீர்க்கப் பரவலால் சூரியன் இந்தியாவின் மேற்கு பகுதியைக் காட்டிலும் கிழக்குப் பகுதியில் 1 மணி 56 நிமிடம் முன்னதாக உதிக்கவோ அல்லது மறையவோ செய்கின்றது. இதனால் நம் நாட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நேரமிருந்தால் குழப்பம் நேரிடும். இதனைத் தவிர்ப்பதற்காக நாட்டின் நடுவில் செல்லும் $82^{0}30'$ கிழக்குத் தீர்க்கத்தை தேர்வு செய்து அப்பகுதியில் நிலவும் நேரத்தையே நம்நாடு முழுவதற்கும் திட்டநேரமாக (IST) பயன்படுத்தப்படுகிறது.

### இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்

இந்தியாவில் கிழக்கே உள்ள அரக்கோயோமா மலைத் தொடர் இந்தியாவை மியான்மரிலிருந்து பிரிக்கிறது. இந்தியாவிற்கு தெற்கில் உள்ள இலங்கையை பாக் நீர்ச்சந்தி பிரிக்கிறது. இமயமலைத் தொடர்கள் இந்தியாவின் வடக்கு இயற்கை எல்லையாக அமைந்து உள்ளன.

இந்தியாவின் அண்டைநாடுகள் பின்வருமாறு: 1. மேற்கில் பாகிஸ்தான் 2.வடமேற்கில் ஆப்கானிஸ்தான் 3.வடகிழக்கில் நேபாளம், பூடான் மற்றும் சீனா 4.கிழக்கில் வங்காளதேசம் மற்றும் மியான்மர்.

இந்தியா தென்மேற்கு திசையில் அரபிக் கடலாலும், கிழக்கு மற்றும் தென் கிழக்கில் வங்காளவிரிகுடாவாலும், தெற்கில் இந்தியப் பெருங்கடலாலும் சூழப்பட்டுள்ளது. இந்திய தீபகற்பத்தின் தென் முனையாக கன்னியாகுமரி அமைந்துள்ளது.

வங்காளவிரிகுடாவில் உள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளும், அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகளும் இந்திய யூனியன் பிரதேசங்களாக அமைந்துள்ளன.

### வேற்றுமையில் ஒற்றுமை

1. இந்தியா மிக உயர்ந்த மலைச் சிகரங்கள் முதற்கொண்டு மிகக் குறைந்த சமவெளிகள் வரை தனித்துவம் மிக்க நில அமைப்புக்களைக் கொண்டுள்ளது.

**உலகின் மிக உயர்ந்த சிகரம் எது ?**

உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட், இமயமலையில்

அமைந்துள்ளது. இது நேபாளம் மற்றும் சீன எல்லையில் அமைந்துள்ளது. இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 8848 மீ ஆகும்.

2. கடகரேகைக்கு வடக்கே மிதவெப்பமண்டலக் காலநிலையும் தெற்கே வெப்பமண்டலக் காலநிலையும் கொண்டுள்ளது. மிக அதிக மழை பெறும் பகுதியான மேகாலயாவிலுள்ள சிரபுஞ்சியும், மிகக் குறைந்த மழை பெறும் பகுதியான தார் பாலைவனமும் இங்குதான் அமைந்து உள்ளது.

3. மேற்கு தொடர்ச்சி மலையில் ஈரமிக்க அடர்ந்த வெப்ப மண்டலக் காடுகளும் மேற்கு வங்கத்தில் மாங்குரோவ் மரங்கள் கொண்ட சுந்தரவனங்களும், தார் பாலைவனத்தின் புதர்களும் ஆங்காங்கே பரவிக் காணப் படுகின்றன.

4. வேறுபட்ட இயற்கைச் சூழ்நிலையும், காலநிலையும் இந்தியாவை பல்வேறு வகையான தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் உகந்த ஓர் வாழிடமாகத் (Bio-Diversity) திகழச் செய்கின்றது.

5. இந்தியா, ஓர் மதச் சார்பற்ற நாடு. பல கலாச்சார மாறுபாடுகளுடன் இந்திய மக்கள் இந்து, கிறிஸ்துவம் , இஸ்லாமியம், சீக்கியம், புத்தம், ஜைனம் மற்றும் ஜொராஸ்டிரியம் போன்ற மதங்களைப் பின்பற்றி வாழ்கின்றனர். இவ்வாறு இந்தியாவில் பல வேற்றுமைகள் நிறைந்த இயற்கைச் சூழ்நிலை, மதங்கள் மற்றும் இனங்கள், இருப்பினும் 'இந்திய கலாச்சாரம்' மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கிறது. இதனால் தான் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்த நாடு என அறியப்படுகின்றது.

எப்போதெல்லாம் பிரச்சனைகள் எழுகின்றனவோ அப்போதெல்லாம் மக்கள் தங்களிடையேயுள்ள வேற்றுமைகளை உதறிவிட்டு, ஒன்று கூடி நின்று பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். இதற்கு சிறந்த எடுத்துகாட்டுகளாக, கார்கில் படையெடுப்பின் போதும், இயற்கை சீற்றங்களான சுனாமியும், வெள்ளமும் ஏற்பட்டபோதும் மக்கள்ஒன்று கூடியதைக் கூறலாம்.

நம் கலாச்சாரப் பண்புகளைப் பாதுகாத்து வருவதும் அவற்றை நம் நாட்டின் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் கூறுவதும் நம் அனைவரின் கடமையாகும். அத்துடன் நாம் அனைவரும் இந்தியர் என்பதை பெருமையுடன் நிரூபிப்பதும் நமது கடமையே.

## இந்தியா – அரசியல் பிரிவுகள்

இந்தியா 29 மாநிலங்களாகவும், 7 யூனியன் பிரதேசங்களாகவும், மொழி அடிப்படையில் நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் இயற்கையமைப்பு

ஒரு நாட்டின் இயற்கை நிலத் தோற்றங்களைப் பற்றி விவரிப்பதே இயற்கையமைப்பு எனப்படும். இந்தியா பெரிதும், மாறுபட்ட நிலத்தோற்றங்களைக் கொண்ட நாடு ஆகும். இந்திய தீபகற்ப பீடபூமி புவியிலுள்ள உறுதியான, தொன்மையான பாறை அமைப்புகளில் ஒன்றாக விளங்குகிறது.

## இந்தியாவின் இயற்கை அமைப்புப் பிரிவுகள்

இந்திய நிலப்பகுதி பல மாறுபட்ட புவியியல் நிலத் தோற்றங்களைப் பெற்றுள்ளது. நிலத்தோற்றங்களின் அடிப்படையில் இந்தியாவின் இயற்கையமைப்பை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அவையாவன:

1) வடக்கு மலைகள்
2) வடபெரும் சமவெளிகள்
3) தீபகற்ப பீடபூமி
4) கடற்கரைச் சமவெளிகள்
5) தீவுகள்

# இந்தியா – அரசியல் பிரிவுகள்



## மாநிலங்களைப் பற்றிய தகவல்கள்

| வ.எண் | மாநிலங்கள் | தலைநகரம் | பரப்பு ச.கி.மீ | மக்கள் தொகை | மக்கள் தொகை (2011) அடர்த்தி/ ச.கி.மீ |
|---|---|---|---|---|---|
| 1 | ஆந்திரப்பிரதேசம் தெலங்கானா **(29)** | ஹைதராபாத் | 275045 | 84665533 | 308 |
| 2 | அருணாச்சலபிரதேசம் | இட்டாநகர் | 83743 | 1382611 | 17 |
| 3 | அஸ்ஸாம் | திஸ்பூர் | 78438 | 31169272 | 397 |
| 4 | பீகார் | பாட்னா | 94163 | 103804637 | 1102 |
| 5 | சட்டீஸ்கர் | ராய்ப்பூர் | 135191 | 25540196 | 189 |
| 6 | கோவா | பனாஜி | 3702 | 1457723 | 394 |
| 7 | குஜராத் | காந்திநகர் | 196024 | 60383628 | 308 |
| 8 | ஹரியானா | சண்டிகர் | 44212 | 25353081 | 573 |
| 9 | இமாச்சலப்பிரதேசம் | சிம்லா | 55673 | 6856509 | 123 |
| 10 | ஜம்மு–காஷ்மீர் | ஸ்ரீநகர், ஜம்மு | 222236 | 12548926 | 56 |
| 11 | ஜார்கண்ட் | ராஞ்சி | 79714 | 32966238 | 414 |
| 12 | கர்நாடகா | பெங்களூரு | 191791 | 61130704 | 319 |
| 13 | கேரளா | திருவனந்தபுரம் | 38863 | 33387677 | 859 |
| 14 | மத்தியப்பிரதேசம் | போபால் | 308245 | 72597565 | 236 |
| 15 | மகாராஷ்டிரம் | மும்பை | 307713 | 112372972 | 365 |
| 16 | மணிப்பூர் | இம்பால் | 22327 | 2721756 | 122 |
| 17 | மேகாலயா | ஷில்லாங் | 22429 | 2964007 | 132 |
| 18 | மிசோரம் | ஐஸ்வால் | 21081 | 1091014 | 52 |
| 19 | நாகாலாந்து | கோஹிமா | 16579 | 1980602 | 119 |
| 20 | ஒடிசா | புவனேஸ்வர் | 155707 | 41947358 | 269 |
| 21 | பஞ்சாப் | சண்டிகர் | 50362 | 27704236 | 550 |
| 22 | ராஜஸ்தான் | ஜெய்ப்பூர் | 342239 | 68621012 | 201 |
| 23 | சிக்கிம் | காங்டாக் | 7096 | 607688 | 86 |
| 24 | தமிழ்நாடு | சென்னை | 130058 | 72138958 | 555 |
| 25 | திரிபுரா | அகர்தலா | 10486 | 3671032 | 350 |
| 26 | உத்தரகாண்ட் | டேராடூன் | 53483 | 10116752 | 189 |
| 27 | உத்திரப்பிரதேசம் | லக்னோ | 240928 | 199581477 | 828 |
| 28 | மேற்கு வங்காளம் | கொல்கத்தா | 88752 | 91347736 | 1029 |
| **யூனியன் பிரதேசங்கள்** | | | | | |
| 1 | டெல்லி | டெல்லி | 1483 | 16753235 | 11297 |
| 2 | அந்தமான் – நிகோபர் தீவுகள் | போர்ட் பிளேயர் | 8249 | 379944 | 46 |
| 3 | சண்டிகர் | சண்டிகர் | 114 | 1054686 | 9252 |
| 4 | தாத்ரா – நகர் ஹவேலி | சில்வாசா | 491 | 342853 | 698 |
| 5 | டாமன் – டையூ | டாமன் | 112 | 242911 | 2161 |
| 6 | இலட்சத்தீவுகள் | கவரத்தி | 32 | 64429 | 2013 |
| 7 | புதுச்சேரி | புதுச்சேரி | 479 | 1244464 | 2598 |

## 1) இமயமலைகள்

வடக்கு மலைகள் என்பது இமய மலைகளை குறிப்பதாகும். இது உலகிலேயே மிக உயர்ந்த மலைகளாகும். இம்மலைகளின் உயர்ந்த சரிவுப் பகுதிகள் எப்போதும் நிரந்தமான பனியால் மூடியுள்ளதால் இமயமலைகளை 'பனி உறைவிடம்' என்று அழைப்பார்கள்.


இமயமலைகள் 'வில்' போன்ற வடிவத்தில் 2500 கி.மீ நீளத்திற்கு மேற்கு–கிழக்காக அமைந்துள்ளன. மேற்கே ஜம்மு காஷ்மீரில் உள்ள சிந்து பள்ளத்தாக்கிலிருந்து கிழக்கே அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள பிரம்மபுத்திரா பள்ளதாக்கு வரை நீண்டு செல்கின்றன. இங்குள்ள பல மலைகள் கடல் மட்டத்திலிருந்து 8000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்டவை. இம்மலைகள் ஜம்மு–காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், உத்தரகாண்ட், மேற்கு வங்காளம், சிக்கிம் மற்றும் அருணாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே பரவியுள்ளன.

## இமயமலை உருவான விதம்

இமயமலைகள் ஒரே தொடர்ச்சியான மலைத்தொடர் அல்ல. ஆனால் பல மலைகள் ஏறத்தாழ இணையாகவும் பள்ளதாக்குகளாலும் பீடபூமிகளாலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவை எவ்வாறு உருவாயின என்பதைப் பார்ப்போம்.

பல மில்லியன் வருடங்களுக்கு முன்பு புவியானது ஒரே நிலப்பகுதியாகத்தான் இருந்தது. இவ்வாறு இருந்த நிலப்பகுதி 'பாஞ்சியா' என்றும் அதை சுற்றியிருந்த கடல் பகுதி 'பாந்தலாசா' என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாறு பரந்த நிலப்பகுதி இரு பகுதிகளாகப் பிரிந்தது. வடபகுதி 'அங்காரா' (லாரஷியா) என்றும் தென்பகுதி 'கோண்டுவானா' என்றும் பெயரிடப்பட்டன. இந்த இரண்டு நிலப்பகுதியை பிரிக்கும் நீர்ப்பகுதிக்கு 'டெத்தீஸ் கடல்' என்று அழைக்கப்பட்டது. இக்கடல் கிழக்கு மேற்காக பரவியிருந்தது.

அங்காரா மற்றும் கோண்டுவானா பகுதியிலிருந்து உருவாகி வரும் ஆறுகள், தான் கொண்டு வந்த படிவுகளை டெத்தீஸ் கடலில் படியவைத்தன. நீண்ட காலத்திற்கு பிறகு கோண்டுவானா நிலப்பகுதி வடக்கு நோக்கி நகர்ந்ததால் டெத்தீஸ் கடல் அடியில் இருந்த படிவு மடிக்கப்பட்டு உயர்த்தப்பட்டதால் இமயமலை என்ற மடிப்பு மலை தோன்றியது.




இமயமலைகளை மேற்கிலிருந்து கிழக்காக மேலும் மூன்று உட்பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன

அ) மேற்கு இமயமலைகள் ஆ) மத்திய இமயமலைகள் இ) கிழக்கு இமயமலைகள்

### அ) மேற்கு இமயமலைகள்

வடமேற்கு இந்தியாவிலுள்ள பாமீர் முடிச்சிலிருந்து கிழக்காக காரகோரம் மலைகள் செல்கின்றன. தென்மேற்கு காஷ்மீரில் அமைந்துள்ள இம்மலைகள் ஆப்கானிஸ்தானிற்கும், சீனாவிற்கும் இடையில் இந்திய எல்லைகளாக அமைந்துள்ளன. உலகின் இரண்டாவது உயர்ந்த சிகரமான K2 எனப்படும் காட்வின் ஆஸ்டின் இம்மலைத்தொடரில்

அமைந்துள்ளது. தற்போது காரகோரம் கணவாய் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. பல்டோரா மற்றும் சியாச்சின் எனும் இரு பெரும் பனியாறுகளும் காரகோரம் மலைகளின் தெற்கே அமைந்துள்ளன. லடாக் மற்றும் ஜாஸ்கர் என்ற இரு மலைத் தொடர்கள் காரகோரம் மலைத் தொடர்களுக்கு இணையாக அமைந்துள்ளன. லடாக், மலைத்தொடரின் தொடர்ச்சி லடாக் பீடபூமி எனவும் அதுவே இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த பீடபூமியாகவும் அமைகிறது. இது வடமேற்கு காஷ்மீரில் அமைந்துள்ளது.

### ஆ) மத்திய இமயமலைத் தொடர்கள்

பாமீர் முடிச்சிலிருந்து தென்கிழக்கு திசை நோக்கிச் செல்லும் இமயமலைகளை மத்திய இமயமலைகள் என்கிறோம். மத்திய இமயமலைகளில் வடக்கு தெற்காக மூன்று இணையான மலைத்தொடர்கள் காணப்படுகின்றன.

1. ஹிமாத்ரி
2. ஹிமாச்சல்
3. சிவாலிக்

### 1. ஹிமாத்ரி (அ) பெரிய இமயமலை

இமயமலையின் வடக்கு மலைத்தொடரை ஹிமாத்ரி என்கிறோம். இதன் சராசரி உயரம் 6000 மீ ஆகும். இம்மலைத்தொடர் வடமேற்கே சிந்து பள்ளத்தாக்கிலிருந்து வடகிழக்கில் உள்ள பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு வரை நீண்டு செல்கின்றன. உலகிலுள்ள மிக உயர்ந்த சிகரங்களில் பல இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன. உலகிலேயே மிக உயரமுள்ள 8848 மீ உயரம் கொண்ட எவரெஸ்ட் மலைச்சிகரம் இங்கு அமைந்துள்ளது. கஞ்சன்ஜங்கா (8598 மீ) நங்கபர்வத் (8126மீ) தவளகிரி (8167மீ) மற்றும் நந்ததேவி (7817மீ) ஆகிய சிகரங்களும் இங்கு அமைந்துள்ளன. பல ஆறுகளின் உருவாக்கத்திற்கு ஆதாரமாக விளங்கும் பனியாறுகள் இங்கு அமைந்துள்ளன. உதாரணமாக கங்கையின் பிறப்பிடமான கங்கோத்ரி பனியாறும், யமுனையின் பிறப்பிடமான யமுனோத்திரி பனியாறும் இங்கே அமைந்துள்ளன. மலைகளின் குறுக்கே காணப்படும் இயற்கைப் பாதைகளை கணவாய்கள் என்கிறோம். அவை அண்டை நாடுகளுக்குச் செல்ல உதவும் பாதைகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக காஷ்மீரிலுள்ள சொஜிலா கணவாய், இமாச்சலப் பிரதேசத்திலுள்ள ஷிப்கிலா கணவாய், சிக்கிமில் உள்ள நாதுலா மற்றும் ஜலப்புலா போன்றவை ஹிமாத்திரியிலுள்ள முக்கிய கணவாய்களாகும்.


### 2. ஹிமாச்சல் (அ) சிறிய இமயமலை

வடக்கே ஹிமாத்ரி மலைக்கும் தெற்கே சிவாலிக் மலைக்கும், இடையே ஹிமாச்சல் மலைத்தொடர் அமைந்துள்ளது. இதன் சராசரி அகலம் 80 கி.மீ ஆகும். இதன் சராசரி உயரம் 3700 மீ முதல் 4500 மீ வரை மாறுபடுகிறது. இது குன்றுகளையும் பிளவுபட்ட மேட்டு நிலங்களையும் மிகவும் கரடுமுரடான தரையமைப்பையும் கொண்டது. இப்பகுதியில் உள்ள நீண்ட மலைத் தொடராக காஷ்மீரின் பீர்பாஞ்சால் தொடர் உள்ளது. இமாச்சலப் பிரதேசத்தில் ஜம்மு–காஷ்மீரில் இருந்து வரும் தவ்லதார் மலைத்தொடர் நீண்டு செல்கிறது. இம்மலைத்தொடர்களுக்கு இடையே காஷ்மீர், காங்கிரா, குலு பள்ளத்தாக்குகள் அமைந்துள்ளன. புகழ்பெற்ற மலை வாழிடங்களான ஸ்ரீநகர் பாகல்கம், குல்மார்க், முசௌரி, சிம்லா மற்றும் நைனிடால் போன்றவைகளும் இங்கு அமைந்துள்ளன. புனித இடங்களான அமர்நாத் , கேதார்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோயில்களும் சிறப்பு மிக்க இடங்களாக ஹிமாச்சல் மலைத்தொடரில் அமைந்துள்ளன.


### 3. சிவாலிக் (அ) வெளி இமயமலை

இமயமலையின் தென்பகுதியில் சிவாலிக் மலைகள் உள்ளன. இதன் சராசரி உயரம் 1000 மீ ஆகும். இது களிமண்ணாலும், மென்பாறைகளாலும் ஆன தொடர்ச்சியற்ற மலையாகும். குறுகலான நீண்ட டூன் எனப்படும் பள்ளத்தாக்குகள் சிவாலிக்

## இந்தியா – இயற்கை பிரிவுகள்




## வடக்கு மலைகள்




### மலைச் சிகரங்கள்

1. K2 ( 8611 மீ )
2. நங்க பர்வத் ( 8126 மீ )
3. காமெட் ( 7756 மீ )
4. நந்ததேவி ( 7817 மீ )
5. தவளகிரி ( 8172 மீ )
6. எவரெஸ்ட் ( 8848 மீ )
7. கஞ்சன்ஜங்கா ( 8586 மீ )
8. நம்சபர்வத் ( 7756 மீ )

மலைத்தொடரில் காணப்படுகின்றன. சிறந்த எடுத்துக்காட்டாக டேராடூனைக் கூறலாம். ஆறுகளால் கொண்டுவரப்படும் கூழாங்கற்கள், பாறைகளும் சிவாலிக் மலைகளின் அடி வாரத்தில் படிய வைக்கப்படுகின்றன சிவாலிக்கின் தென்பகுதியில் மென்துகள்களான படிவுகள் தராய் சமவெளியை உருவாக்குகின்றன. இது அடர்ந்த காடுகள் வளர்வதற்கும் சதுப்பு நிலங்கள் உருவாவதற்கும் துணைபுரிகின்றன.

### இ) கிழக்கு இமயமலைகள் (பூர்வாஞ்சல்)

பிரம்மபுத்திரா ஆறு இமயமலைகளின் கிழக்கு ஓரப் புவி எல்லையாக அமைகிறது. இந்தியாவின் கிழக்கு எல்லைகளுடன் உள்ள இம்மலைகளை 'பூர்வாஞ்சல்' என்று அழைக்கின்றோம். வடக்கில் பட்காய் மற்றும் நாகா குன்றுகளும், தெற்கில் மீசோ குன்றுகளும் கிழக்கு இமயமலையில் அடங்கியுள்ளன.

## 2. வட பெரும் சமவெளிகள்

இமயமலையின் தெற்கே அமைந்துள்ளவை வட பெரும் சமவெளிகளாகும். இவை சிந்து கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகளின் படிவுகளால் உருவானதாகும். இச்சமவெளி 2400 கி.மீ. நீளம் கொண்டது. ஏறத்தாழ 7 இலட்சம் ச.கி.மீ. அளவிற்கு பரவியுள்ளது. இப்படிவுகள் பாபர் எனப்படும் கரடுமுரடான படிவுகளையும், தராய் எனப்படும் சதுப்புப் படிவுகளையும் பங்கார் எனப்படும் பழைய வண்டல் படிவுகளையும் காடர் எனப்படும் புதிய வண்டல் படிவுகளையும் கொண்டது. பாபர் மண் படிவுகள் மலையடிவாரத்தில் ஏறத்தாழ 8 முதல் 16 கி.மீ வரை அகலத்திற்கு படிந்துள்ளது மலைகளிலிருந்து வரும் ஆறுகள் தாங்கள் கொண்டு வரும் படிவுகளை வண்டல் விசிறிகளாக மலையடிவாரங்களில் படிய வைக்கின்றன. இப்படிவுகளில் நுண் துளைகள் அதிகமாக உள்ளதால், அதன் வழியாக ஓடும் ஆறுகள் உள்வாங்கப்பட்டு, நிலத்தடி நீராக ஓடுகின்றன. இதனால் ஆற்றின் மேற்பரப்பு வறண்ட ஆற்றுப் பகுதியாகக் காணப்படுகிறது.

### தராய்

தராய் என்பது இமயமலை அடிவாரத்தில் காணப்படும் சேறும், சகதியும் கொண்ட ஒரு நிலப்பகுதி ஆகும். பாபர் படிவுகளில் மறைந்திருந்த ஆறுகள் மீண்டும் இப்பகுதியில் தோன்றுகின்றன. இத்தராய், பாபர் பகுதிக்கு தெற்கில் அமைந்துள்ளது. இது சுமார் 15 கி.மீ. முதல் 30 கி.மீ வரை அகலம் கொண்டது. இது ஈரப்பதம் கொண்ட பகுதியாகும். இது காடுகள் வளர்வதற்கும், பல்வேறு விதமான காட்டு விலங்குகள் வாழ்வதற்கும் துணைபுரிகின்றன. பெரும்பாலான தராய் பகுதிகள் தோட்டப் பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

பங்கார் என்பது வண்டல் படிவுகளால் உருவான நிலத்தோற்றம். இங்குள்ள படிவுகள் யாவும் பழைய வண்டல் மண்ணால் ஆனவை. இவை வெள்ளப்பெருக்குச் சமவெளிகளில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் களிமண்ணால் ஆனவை.

காடர் என்பது ஆறுகளால் கொண்டு வரப்படும் புதிய வண்டல் மண். இது வெள்ளப் பெருக்கு சமவெளியின் இரு கரைகளின் மீதும் படியவைக்கப்படும் படிவுகளாகும். வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் இப்படிவுகள் மீது மேலும் புதிய படிவுகள் வந்து சேருகின்றன.

வட இந்தியச் சமவெளியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன

1. ராஜஸ்தான் சமவெளி
2. பஞ்சாப் – ஹரியானா சமவெளி
3. கங்கைச் சமவெளி
4. பிரம்மபுத்ரா சமவெளி

### 1. ராஜஸ்தான் சமவெளி

ராஜஸ்தான் சமவெளி, ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் அமைந்துள்ளது. இது சராசரியாக 300 கி.மீ. அகலத்துடன், ஏறத்தாழ 640 கி.மீ.




தூரத்திற்குப் பரவியுள்ளது. மூன்றில் இரண்டு பகுதி பாலைவனமாக காணப்படும் மேற்கு ராஜஸ்தான் இச்சமவெளியில் அடங்கும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 300 மீட்டர் உயரம் கொண்டது. பொதுவாக பாலைவனத்தின் கிழக்குப் பகுதி பாறைகளாகவும், மேற்குப் பகுதி நகரும் மணல் திட்டுகளாகவும் உள்ளன.

ஆரவல்லி மலைத்தொடரிலிருந்து உருவாகும் பற்பல பருவகால நீரோடைகள், இச்சமவெளியில் காணப்படுகின்றன. இப்பகுதியின் முக்கிய ஆறாகத் திகழ்வது 'லூனி ஆறு'. இது கட்ச் குடாவில் கலக்கிறது. லூனி ஆற்றின் வடபகுதி உள்நாட்டு வடிகால் அமைப்புகள் கொண்டு காணப்படுகிறது. வறண்ட ஆற்றுப் படுகைகள் பலவற்றையும் இங்கு காணலாம்.

**ஆறு எவ்வாறு மறைகிறது ?**

சமீபத்திய புவி அமைப்பியல் வரலாற்றுக் காலத்தில் பல ஆறுகள் மறைந்து போயின. சில ஆறுகள் தங்களது போக்கை மாற்றிக் கொண்டன. சில ஆறுகள் முழுவதுமாக மறைந்தே போயின. வேத காலத்திலும் வேதத்திற்கு முற்பட்ட காலத்திலும் வலிமையான ஆறாக இருந்த 'சரஸ்வதி ஆறு' பெருகி வரும் பாலைவனப் பரப்பிற்குள் சிறிது சிறிதாக மறைந்து போயிற்று. தற்போது உள்ள 'காகர்' ஆறு மறைந்துபோன சரஸ்வதி ஆற்றின் தொடர்ச்சி என்று நம்பப்படுகிறது.

பல உப்பு ஏரிகளும் ராஜஸ்தான் சமவெளியில் அமைந்துள்ளன. இவற்றுள் ஜெய்ப்பூருக்கு மேற்கே சுமார் 65 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள 'சாம்பார் ஏரி'(Puskar lake) மிகப்பெரிய ஏரியாகும்.

## 2. பஞ்சாப் – ஹரியானா சமவெளிகள்

வளமான பஞ்சாப் – ஹரியானா சமவெளிகள் இந்தியப் பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன. இவை வடக்கிலிருந்து தென்மேற்காக சுமார் 640கி.மீ. தூரத்திற்கும் மேற்கிலிருந்து கிழக்காக சுமார் 300 கி.மீ. தூரத்திற்கும் பரவியுள்ளது. டெல்லி முகடு (ridge) பஞ்சாப்–ஹரியானா சமவெளிகளை கங்கைச் சமவெளியிலிருந்து பிரிக்கிறது.

பஞ்சாப்–ஹரியானா சமவெளி, சட்லெஜ், பியாஸ், ராவி ஆறுகளால் ஏற்படும் படிவுகளால் ஆனது. ராஜஸ்தான் சமவெளியை ஒட்டியுள்ள இச்சமவெளியின் தென்கிழக்குபகுதி மணற் பாங்கானதாகவும் நகருகின்ற மணற் திட்டுக்களைக் கொண்டதாகவும் உள்ளது. ஹரியானாவிலுள்ள காக்ரா நதிக்கும் யமுனா நதிக்கும் இடைப்பட்ட நிலபரப்பே ஹரியானா சமவெளியாக அமைகிறது.

**ஆற்றிடைச்சமவெளி (தோ ஆப்) என்றால் என்ன ?**

இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட செழிப்பான வண்டல் மண் நிறைந்த சமவெளி ஆகும். கங்கை மற்றும் யமுனை ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி.

## 3. கங்கைச் சமவெளி

கங்கைச் சமவெளி மிகப் பரந்த சமவெளி. இது மேற்கிலுள்ள யமுனா ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்கதேசம் வரை சுமார் 1500 கி.மீ. நீளத்துடனும், சராசரி 300 கி.மீ. அகலத்துடனும் பரவியுள்ளது. இது உத்திரப்பிரதேசம், பீகார், மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் பரவியுள்ளது. ராம்கங்கா, கோமதி, காக்ரா, காண்டக், கோசி, யமுனா போன்ற நதிகள் வடக்கிலிருந்தும், சோன், சம்பல், பீட்வா போன்ற நதிகள் தெற்கிலிருந்தும் உருவாகி கங்கை ஆற்றின் துணையாறுகளாக கங்கையுடன் சேருகின்றன. இவ்வாறுகள் முறையே மலைகளிலிருந்தும் பீடபூமிகளிலிருந்தும் அதிக அளவில் மணலையும் வண்டலையும் படிய வைத்து மிகப்பெரிய சமவெளியை உருவாக்குகின்றன. கங்கைச் சமவெளியினுடைய சரிவு கிழக்கு மற்றும் தென்கிழக்கு நோக்கி மென்சரிவாக அமைந்துள்ளது. இதன் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து 200 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

இச்சமவெளியின் மேற்பகுதியில் கங்கை, யமுனையின் ஆற்றிடைச் சமவெளி (Doab) அமைந்துள்ளது.

இச்சமவெளியின் கிழக்கில் ரோஹில்கண்ட் தாழ்நிலம் அமைந்துள்ளது. ஆற்றுப் பாதையின் மையப்பகுதியில் படிவுகள் நிறைந்துள்ளதால், ஆற்றுநீரின் போக்கு மாறிக்கொண்டே வருகிறது. இதனால், இப்பகுதி முழுவதும் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந்து மதத்தினை பின்பற்றும் மக்கள் கங்கை மற்றும் யமுனை ஆற்றினை புனிதமானதாகக் கருதுகின்றனர். எனவே புனிதமாக கருதப்படும் ஆறுகளின் கரைப் பகுதிகளில் ஹரித்துவார், மதுரா, வாரனாசி, அலகாபாத் போன்ற புனிதத் தலங்கள் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து கல்வி, பண்பாடு மற்றும் சுற்றுலாத் தலங்களாகவும் உள்ளன.

பீகாரின் துயரம் என்றழைக்கப்படும் கோசி ஆறு தன் ஆற்றுப்போக்கை சமீப காலத்தில் சுமார் 100 கி.மீ. வரை மாற்றியமைத்துள்ளது.

கங்கைச் சமவெளியின் தாழ்ந்த பகுதியில் கங்கா–பிரம்மபுத்திரா ஆறுகள் பல்வேறு இணையாறுகளாகப் பிரிந்து, உலகிலேயே மிகப்பரந்த சமவெளியை உருவாக்கி உள்ளன. இச்சமவெளியின் தாழ்பகுதி **சுந்தரவனம்** என அழைக்கப்படுகிறது. இப்பகுதி ஓதத்தால் ஏற்படும் அடர்ந்த சதுப்பு நிலக் காடுகளைக் கொண்டுள்ளது. இச்சமவெளி கழிமுகங்கள், சதுப்புநிலக்காடுகள், மணல் திட்டுக்கள் மற்றும் தீவுகளைக் கொண்டுள்ளது.

## 4. பிரம்மபுத்ரா சமவெளி

இது வடபெரும் சமவெளியின் கிழக்கு ஓரப்பகுதி பிரம்மபுத்ரா ஆற்றினையும் அதன் பல்வேறு துணையாறுகளையும் கொண்டுள்ளது. பிரம்மபுத்ரா ஆறு சாங்போ என்ற பெயருடன் திபெத்தில் உருவாகிறது. அது இந்தியாவிற்குள் நுழையுமுன் **'திகாங்'** ஆழப் பள்ளத்தாக்கை உருவாக்கி, அஸ்ஸாம் பள்ளத்தாக்கில் நுழைகிறது.



பிரம்மபுத்ரா ஆறு – அஸ்ஸாம்

வடகிழக்கிலுள்ள அஸ்ஸாம் குன்றுகளிலிருந்து பல்வேறு துணையாறுகள் தோன்றி பிரம்மபுத்ரா ஆற்றுடன் இணைந்து, வண்டல்

விசிறிகளை ஏற்படுத்துகின்றன. களிமண் நிறைந்த சதுப்பு நிலங்கள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. வண்டல் விசிறிகளால் 'தராய்' எனப்படும் சதுப்பு நிலக்காடுகள் உருவாகியுள்ளன.

### 3. தீபகற்ப பீடபூமி

தீபகற்ப பீடபூமி வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது. இது முக்கோணவடிவம் கொண்டது. சுமார் 16 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இதனைச் சுற்றி வடக்கே ஆரவல்லி, விந்தியா, சாத்பூரா, ராஜ்மகால் மலைத்தொடர்களும், மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைகளும், கிழக்கே கிழக்குத்தொடர்ச்சிமலைகளும் அமைந்துள்ளன.

இது கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 600 –900 மீட்டர் உயரத்தையும் கொண்டது. இது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்து உள்ளது. ஆனால் நர்மதை–தபதி பகுதிகளில் கிழக்கிலிருந்து மேற்காக சரிந்துள்ளது. நர்மதை ஆறு தீபகற்ப பீடபூமியை இரு சமமற்ற பகுதிகளாகப் பிரிகின்றது. இதன் வடபகுதியை மத்திய உயர்நிலங்கள் என்றும், தென் பகுதியை தக்காண பீடபூமி என்றும் அழைப்பர்.

### அ) மத்திய உயர்நிலங்கள்
### 1. மாளவ பீடபூமி

ஆரவல்லி மலை, விந்திய மலை மற்றும் பண்டல்கண்ட் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. சம்பல் நதியும் அதன் துணையாறுகளும் சேர்ந்து பீடபூமியின் வட பகுதியில் அரிப்பாலான பள்ளங்களை (ravines) உண்டாக்கியுள்ளது.

### 2. பண்டல்கண்ட் உயர் நிலம்

இது யமுனையாற்றின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது தீப்பாறைகளாலும் உருமாறிய பாறைகளாலும் ஆக்கப்பட்டது. இதன் வட பகுதியில் கங்கா மற்றும் யமுனை ஆறுகள் வண்டல் மண்ணைப் படிய வைக்கின்றன. இதன் குன்றுப்பகுதிகள் மணற் பாறைகளாலும், கருங்கற்களாலும் ஆக்கப்பட்டவை. பீட்வா மற்றும் கென் போன்ற ஆறுகள் ஆழமான பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன.

### 3. பகல்கண்ட்

பகல்கண்ட் மைக்காலா மலைத் தொடரின் கிழக்கே அமைந்துள்ளது. இது மேற்கில் மணற்பாறைகளாலும் சுண்ணாம்பு பாறைகளாலும் கிழக்கில் கருங்கற்கலாலும் ஆனது. பீடபூமியின் மத்தியப்பகுதி சோன் ஆற்றுக்கும் மகாநதி ஆற்றுக்கும் இடையே நீர்ப்பிரி மேடாக அமைந்துள்ளது.

### 4. சோட்டாநாகபுரி பீடபூமி

சோட்டா நாகபுரி பீடபூமி மத்திய உயர் நிலங்களின் வட கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. தாமோதர், சுபர்ணரேகா, கோயல் மற்றும் பராக்கர் ஆறுகள் இதன் வழியாகப் பாய்கின்றன. இப்பகுதியின் மத்தியில் தாமோதர் ஆறு மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்கிறது. இப்பகுதி பீடபூமிகளாலும், மலைகளாலும் சூழப்பட்டுள்ளது. ஹசாரிபாக் பீடபூமி, தாமோதர் ஆற்றின் வடக்கிலும், ராஞ்சிப் பீடபூமி தெற்குப் பகுதியிலும் இராஜ்மகால் குன்றுகள் வடகிழக்கிலும் அமைந்துள்ளன.

### ஆ) தக்காண பீடபூமி

சுமார் 5 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவில் தக்காணப்பீடபூமி அமைந்துள்ளது. இது லாவா எனப்படும் எரிமலைக் குழம்பால் உருவாகி கருப்பு மண்ணால் ஆன பகுதியாகும்.வட மேற்கு திசையில் விந்திய சாத்பூரா மலைத் தொடர்களையும் வடக்கில் மகாதேவ் மற்றும் மைக்கலா மலைத்தொடர்களையும் மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்குத்தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாக கொண்டுள்ளது. தக்காணபீடபூமி மேற்கிலிருந்து கிழக்காகச் சரிந்துள்ளது. அதன் காரணமாக மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காளவிரிகுடா கடலுடன் கலக்கிறது தக்காண பீடபூமியின்

வட பகுதி தீப்பாறைகளையும் கரிசல் மண்ணையும் கொண்டுள்ளது. இப்பீடபூமியின் தென்பகுதியான கர்நாடகா பீடபூமி நீலகிரி மலைத்தொடருடன் இணைகிறது. தெலுங்கானா பீடபூமி வழியாக கோதாவரி, கிருஷ்ணா மற்றும் பெண்ணாறு ஆறுகள் ஓடுகின்றன.

### தீபகற்ப இந்தியாவிலுள்ள மலைத்தொடர்கள்

#### 1. ஆரவல்லி மலைத்தொடர்

ஆரவல்லி மலைத்தொடர் உலகிலேயே மிகப்பழமையான மடிப்பு மலைத் தொடராகும். இது வடகிழக்கிலிருந்து தென்மேற்காக சுமார் 800 கி. மீ. வரை பரவியுள்ளது. வடக்கில் சராசரியாக சுமார் 400 மீ உயரத்தையும் தெற்கில் 900 மீ உயரத்தையும் கொண்டுள்ளது. ஆரவல்லி மலைத் தொடரின் மிக உயர்ந்த 'குருசிகார்' (1722மீ) சிகரம் அபு மலையில் அமைந்துள்ளது. ஆரவல்லி மலைத்தொடர் பெரிதும் அரிக்கப்பட்டும் பிளவுபட்டும் காணப்படுகின்றது. இது எஞ்சியுள்ள மலைக்கு (Relic Mountain) உதாரணம்.

#### 2. விந்திய மலைத்தொடர்

விந்திய மலைத்தொடர் நர்மதை ஆற்றின் பள்ளத்தாக்கிற்கு மேல் செங்குத்து சரிவாக (Escarpment) உயர்ந்து காணப்படுகின்றது. இது நர்மதை ஆற்றிற்கு இணையாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 1200 கி.மீ. வரை நீண்டு செல்கிறது. இம்மலை மணற்பாறைகள், சுண்ணாம்பு பாறைகள் மற்றும் மென் களிமண்ணாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மலைத் தொடர் கங்கையாற்றின் தொகுதிகளுக்கும் தென்னிந்திய ஆறுகளுக்கும் இடையே நீர்ப்பிரி மேடாக இருக்கிறது.

#### 3. சாத்பூரா மலைத்தொடர்

இம்மலைத்தொடர் நர்மதை மற்றும் தபதி ஆறுகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. இது ஏழுமலைகளைக் கொண்ட மலைத் தொடர்ச்சியாகும். இது சுமார் 900 கி.மீ. வரை நீண்டு காணப்படுகின்றது. சாத்பூரா மலைத்தொடரின் உயரம் 900 மீ. மேல் உள்ளது.

#### இ) மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள்

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள் வடக்கு தெற்காக நீண்டு, தக்காண பீடபூமிக்கு மேற்கு எல்லையாக அமைகின்றன. இவைகள் வடக்கே தபதி நதியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை சுமார் 1600 கி.மீ. வரை பரவியுள்ளன. மேற்குத்தொடர்ச்சி மலையானது மேற்கு கடற்கரைச் சமவெளியில் செங்குத்தாக உயர்ந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக, மேற்கில் நதிகள் வேகமாக பாய்கின்றன. இதனால் சாராவதி ஆற்றில் ஜோக் நீர்வீழ்ச்சி (270 மீட்டர்) போன்ற பல நீர்வீழ்ச்சிகளை உருவாக்குகின்றன. இம்மலைத்தொடரின் கிழக்குப் பகுதி மென்சரிவாகக் காணப்படுகிறது. கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் கிழக்குச் சரிவில் உருவாகி கிழக்காகப் பாய்ந்து வங்காளவிரிகுடாவில் கலக்கின்றன.

தால்காட் கணவாய், போர்காட் கணவாய் மற்றும் பாலக்காட்டு கணவாய் ஆகியவை மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் முக்கிய கணவாய்கள் ஆகும். மேற்கில் கொங்கண கடற்கரைப் பகுதிக்கும் கிழக்குத் தக்காண பீடபூமிக்கும் இடையில் சாலைகள் மற்றும் இரயில் போக்குவரத்திற்கு இக்கணவாய்கள் பெரிதும் பயன்படுகின்றன.

கிழக்குத்தொடர்ச்சி மலைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைகளும் நீலகிரி மலையில் ஒன்றிணைகின்றன. இங்கு மிக உயரமான தொட்டபெட்டா (2637 மீ) மலைச்சிகரம் அமைந்துள்ளது. உதகமண்டலம் ஓர் மலை வாழிடம். இது நீலகிரி மலையில் உள்ள தொட்டபெட்டா சிகரத்தின் அடிவாரத்தில் அமைந்துள்ளது.

நீலகிரி மலைக்குத் தெற்குப்பகுதியில் பாலக்காட்டுக் கணவாய் அமைந்துள்ளது. இக்கணவாய் கேரள கடற்கரை சமவெளிப் பகுதியை தமிழ்நாட்டுடன் சாலைகள்

மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கிறது.

தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ஆனைமுடியாகும். (2695மீ) இதிலிருந்து வடக்கில் ஆனைமலையும், வடகிழக்கில் பழனி மலையும் மற்றும் தெற்கில் ஏலமலையும் பிரிந்து செல்கின்றன.



மேற்குத்தொடர்ச்சி மலை

மலை வாழிடமான 'கொடைக்கானல்' பழனிமலையின் தென் முனையில் அமைந்துள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலை கன்னியாகுமரிக்கு 20 கி.மீ தூரத்தில் முடிவடைகிறது.

### ஈ) கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடர்

கிழக்குத்தொடர்ச்சி மலைகள் பெரும்பாலும் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கின்றன. இவை ஒடிசாவிலுள்ள மகாநதிக்கும், தமிழ்நாட்டிலுள்ள வைகை ஆற்றிற்கும் இடையில் பிளவுபட்ட குன்றுகளாக காணப்படுகின்றன. இவை தொடர்ச்சியான மலைகள் அல்ல. கோதாவரி மற்றும் கிருஷ்ணா ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இம்மலைகள் காணப்படவில்லை. கோதாவரி ஆற்றுப் பள்ளத்தாக்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகளை வடபகுதி மற்றும் தென் பகுதி என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. இதன் வடக்குப் பகுதி 200கி.மீ. அகலத்தையும், தென் பகுதி 100 கி.மீ. அகலத்தையும் கொண்டுள்ளது. இதன் வடக்குப் பகுதியில் மிக உயர்ந்த மகேந்திரகிரி (1501 மீ) என்ற சிகரம் காணப்படுகிறது. தென் பகுதியில் நல்லமலை என்ற பிரசித்தி பெற்ற தொடர் உள்ளது. இது பளிங்கு மற்றும் களிமண்ணின் ஒரு வகையான சிலேட்டு மண்ணால் உருவானது. கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியிலுள்ள குன்றுகளும் பீடபூமிகளும் உயரம் குறைந்து நீலகிரியில் மேற்குத்தொடர்ச்சி மலையுடன் இணைந்து விடுகிறது.

தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மலைவாழிடங்கள் உதகமண்டலம், கொடைக்கானல், பச்சமார்க்கி (ம.பி), மகாபலேஸ்வர், ஏற்காடு போன்றவையாகும்.

### 4. கடற்கரைச் சமவெளிகள்

தீபகற்ப பீடபூமியைச் சுற்றியுள்ள கடற்கரைச் சமவெளிகள் மாறுபட்ட அகலத்தைக் கொண்டவை. இது மேற்கில் ரான் ஆப் கட்சிலிருந்து கிழக்கே கங்கை– பிரம்மபுத்ரா சமவெளி வரை 6000 கி.மீ. தூரம் பரவிக் காணப்படுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி மேற்குக் கடற்கரைச் சமவெளி எனப்படுகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதி கிழக்குக் கடற்கரைச் சமவெளி எனப்படுகிறது. இரண்டு கடற்கரைச் சமவெளிகளும் இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரியில் சந்திக்கின்றன.

### மேற்குக் கடற்கரைச் சமவெளி

மேற்குக் கடற்கரைச் சமவெளி வடக்கில் கட்ச் பகுதியில் உள்ள ரான் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இது குஜராத்தைத் தவிர மற்ற பகுதிகளில் குறுகலாக இருக்கிறது. இதன் சராசரி அகலம் சுமார் 65 கி.மீ. ஆகும்.

குஜராத் சமவெளி, கட்ச் மற்றும் கத்தியவார் பகுதிகளின் கிழக்குப் பகுதியில் நர்மதை, தபதி, மாகி மற்றும் சபர்மதி ஆறுகளால் உருவாக்கப்பட்டது. இந்த ஆறுகள் மேற்கு கடற்கரைப் பகுதிகளில் டெல்டாக்களை

உருவாக்குவதில்லை. குஜராத்தின் தென் பகுதி மற்றும் காம்பட்டின் கடற்கரைப் பகுதியும் சேர்ந்து குஜராத் சமவெளி என்றழைக்கப்படுகிறது. இது சதுப்பு நிலங்களின் தொடர்ச்சியாகும், உயர் ஓதங்களின் போது கடற்கரையில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

கொங்கண சமவெளி, குஜராத்திற்கு தெற்கிலிருந்து கோவா வரை சுமார் 500 கி.மீ. வரை பரவியுள்ளது. இதன் அகலம் சுமார் 50 முதல் 80 கி.மீ. வரை காணப்படுகிறது. இங்கு கடலலை அரிப்புகளால் உருவான ஓங்கல் (cliff), முருகைகள் (Reef) மற்றும் தீவுகள் மும்பைக்கு தெற்கில் காணப்படுகின்றன. கொங்கண கடற்கரை வளைகுடாக்கள் மணற்கடற் கரைகளின் தொடர்ச்சியாகும். இதன் வட பகுதி மணற்பாங்காகவும், தென்பகுதி கரடுமுரடான பாறைகளாகவும் காணப்படுகிறது.

கர்நாடகா சமவெளி, கோவாவிலிருந்து மங்களூர் வரை சராசரி அகலம் 30 லிருந்து 50 கி.மீ. வரை நீண்டு காணப்படுகிறது. இச்சமவெளி சில இடங்களில் செங்குத்துச் சரிவை கொண்டுள்ளதால் நீர்வீழ்ச்சிகளை உருவாக்குகின்றது.

மலபார் சமவெளி, மங்களூருக்கும் கன்னியாகுமரிக்கும் நடுவே அமைந்துள்ளது. இங்கு சிறப்பு அம்சங்களாக ஏரிகள், கழிகள் மற்றும் காயல்கள் (backwater) காணப்படுகின்றன. வேம்பநாடு ஏரி கேரளாவின் மிகப்பெரிய ஏரியாகும். பெரும்பாலும், காயல்கள் கடற்கரைக்கு இணையாகக் காணப்படுகின்றன. கழிகளும் காயல்களும் கால்வாய்களால் இணைக்கப்பட்டு, சிறு படகுகளால் எளிதான போக்குவரத்திற்கு உதவுகின்றன.

### கிழக்குக் கடற்கரைச் சமவெளி


கிழக்கு கடற்கரை சமவெளி மேற்கு வங்க ஆற்றுச் சமவெளியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. இது கிழக்கு தொடர்ச்சி மலைத்தொடருக்கும் வங்காளவிரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. கிழக்கு கடற்கரை சமவெளியானது, மேற்கு கடற்கரை சமவெளியைவிட பரந்தும்,அகலமாகவும் காணப்படுகிறது. இதன் சராசரி அகலம் 120 கி.மீ. ஆனால் முகத்துவாரங்களில் இதன் அகலம் 200 கி.மீ. வரை காணப்படுகின்றது. இது நேரான கடற்கரையையும், வரையறுக்கப்பட்ட சென்னையின் மெரினா கடற்கரை போன்ற கடற்கரைச் சமவெளியையும் கொண்டிருக்கிறது. மகாநதி மற்றும் கிருஷ்ணா ஆறுகளுக்கு இடையே காணப்படும் கடற்கரையை வடசர்க்கார் கடற்கரை எனவும் கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகளுக்கு இடையே உள்ள கடற்கரையை சோழ மண்டலக் கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.

உத்கல் சமவெளி ஒடிசா கடற்கரையிலிருந்து 400 கி.மீ. தூரம் நீண்டு, மகாநதி ஆற்று சமவெளியையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதன் கடற்கரை, நேராகவும் மணற் குன்றுகளை எல்லைகளாகக் கொண்டும் காணப்படுகின்றது. 'சிலிகா ஏரி' மகாநதி ஆற்றின் தெற்கே அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய ஏரியாகும்.

ஆந்திரச் சமவெளி பெர்கம்பூர் மற்றும் பழவேற்காடு ( pulicat ) ஏரிக்கு இடையில் அமைந்துள்ளது. இச்சமவெளி, கோதாவரி, கிருஷ்ணா ஆற்றுச் சமவெளிகளால் ஆனது. ஆந்திர கடற்கரைச் சமவெளி நேராகவும் துறைமுக அமைவிடத்திற்கு ஏற்றதாகவும் உள்ளது. விசாகபட்டினம் மற்றும் மசூலிப்பட்டினம் போன்றவை குறிப்பிடத்தக்க துறைமுகங்களாகும். ஆந்திர கடற்கரைச் சமவெளியில் கொல்லேறு ஏரி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டுச் சமவெளி பழவேற்காடு ஏரியிலிருந்து கன்னியாகுமரி வரை 992கி.மீ. நீண்டு பரவியுள்ளது. இதன் சராசரி அகலம் சுமார் 100 கி.மீ. ஆகும். வளமிக்க மண் மற்றும் மேம்படுத்தப்பட்ட

## தீபகற்ப இந்தியாவின் மலைத்தொடர்களும், முக்கிய சிகரங்களும்



நீர்பாசன வசதிகள் காவிரி ஆற்றுச் சமவெளியை தென்னிந்தியாவின் களஞ்சியமாக மாற்றியுள்ளது.

## 5. இந்தியத் தீவுகள்

இந்தியாவின் யூனியன் பிரதேசங்களான, அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் வங்காள விரிகுடாவிலும் இலட்சத்தீவுகள் அரபிக் கடலிலும் அமைந்துள்ளன.



அந்தமான் தீவுகள்

அவைகள் இந்திய நிலப்குதியிலிருந்து வெகுதூரத்தில் அமைந்துள்ளன. அந்தமான் நிகோபார் தீவுகள் $6^{0}$ வ முதல் $14^{0}$ வ அட்சம் வரையிலும் $90^{0}$ கி முதல் $94^{0}$கி தீர்க்கம் வரையிலும் அமைந்துள்ளன. இவை 572 சிறியதும் பெரியதுமான தீவுகளைக் கொண்டவை. இவற்றில் 38 தீவுகள் மட்டுமே வாழிடங்களாக உள்ளன. இதன் மொத்தப்பரப்பு 8249 ச.கி.மீ. அந்தமான் தீவுக் கூட்டங்களை நிகோபர் தீவுக் கூட்டங்களிலிருந்து $10^{0}$ வடக்கு கால்வாய் பிரிக்கிறது.

அந்தமான் நிகோபாரின் தென் கோடி முனையை இந்திரா முனை என்றழைக்கின்றனர். அந்தமான் தீவுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்த அமைப்பாகக் காணப்படுகின்றது. அதிலுள்ள 25 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். நிகோபார் தீவுக்கூட்டங்களிலும் 13 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். தீவுக்கூட்டங்களில் பல மணற்பாறைகள், சுண்ணாம்புப்பாறை மற்றும் களிமண்ணால் ஆக்கப்பட்டவை. இங்குள்ள தீவுகளில் பெரும்பாலனவை எரிமலைகளால் உருவானதாகவும் சில முருகைப் பாறைகளால் ஆனவையாகவும் உள்ளது.

சில தீவுகள் அதிகபட்சம் 750 மீட்டர் உயரம் கொண்ட மலைகளாகவும் உள்ளன. இங்கு அதிக வெப்பமும் அதிக ஈரப்பதமும் கொண்ட காலநிலை இருப்பதால் அடர்ந்த காடுகளும், தென்னந்தோப்புகளும் காணப்படுகின்றன.

அரபிக்கடலில் அமைந்துள்ள இலட்சத்தீவுக் கூட்டங்களிலுள்ள 27 தீவுகளில் 11 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக்கின்றனர். இலட்சத்தீவுகள், மினிக்காய் மற்றும் அமினிதிவி தீவுக் கூட்டங்களை 1973 ஆம் ஆண்டு இலட்சத் தீவுகள் என மறுபெயரிட்டு அழைத்தனர். (இலட்சத்தீவு என்பதற்கு ஒரு இலட்சம் தீவுகள் என்று பொருள்) இத்தீவுக் கூட்டங்கள் 110 ச.கி.மீ பரப்பளவில் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன. இலட்சத்தீவுகள் கேரளக் கடற்கரைக்கு தென்மேற்கில் 200 முதல் 500 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளன. இவையனைத்தும் முருகைப்பாறைகளால் உருவானவை.


## இந்திய நிலத்தோற்றமைப்பின் முக்கியத்துவம்

### வடக்கு மலைகள்

i) இந்தியாவின் வடபகுதியில் உள்ள இமயமலைகள் தென்மேற்கு பருவக் காற்றினைத் தடுத்து, நல்லமழைப் பொழிவையும், பனிப்பொழிவையும் நமக்குத் தருகிறது. இம்மலைகள் இல்லாதிருப்பின், இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பகுதி வெப்பமானதாகவும், வறண்ட பாலைவனமாகவும் மாறியிருக்கக்கூடும்.

ii) இமயமலைகள் இந்தியத்துணை கண்டத்தின் இயற்கை எல்லையாக அமைந்துள்ளன. இங்கு பனி எப்பொழுதும் உறைந்து காணப்படுவதால் அந்நிய படையெடுப்பை தடுக்கிறது.

## இந்திய கடற்கரைச் சமவெளிகள்




iii) இமயமலை கங்கை மற்றும் பிரம்மபுத்திரா போன்ற பல வற்றாத ஜீவநதிகளின் பிறப்பிடமாக அமைந்துள்ளது.

iv) இது பல கோடை வாழிடங்களையும் மற்றும் பல புனிதத்தலங்களையும் கொண்டுள்ளது.

v) இது காடு சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை வழங்குகிறது.

### வடபெரும் சமவெளிகள்

வட இந்திய சமவெளி பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் அதன் வளமிக்க வண்டல் மண், சமதளமான நில அமைப்பு, மெதுவாகச் செல்லும் வற்றாத நதிகள், சாதகமான காலநிலை போன்றவற்றால் வேளாண்மையும், வணிகமும் மேலோங்கி திகழ்கின்றன.

**தீபகற்ப பீடபூமி**

தீபகற்ப பீடபூமி கனிம வளங்களை அதிகம் பெற்றுள்ளது. இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்ஸைட், மைக்கா, குரோமியம், சுண்ணாம்புப் பாறைகள் அதிக அளவில் கொண்டுள்ளது.

**கடற்கரைச் சமவெளிகள்**

பெரிய மற்றும் சிறிய துறைமுகங்கள் கடற்கரைப்பகுதியில் அதிக அளவில் வளர்ச்சியுற்று காணப்படுகின்றன. இவை தேசிய மற்றும் பன்னாட்டு வணிக வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுகின்றன.

## வடிகால் – ஆறுகள் மற்றும் ஏரிகள்

ஆறுகளும் அதன்கிளை ஆறுகளும் நிலப்பகுதியின் முக்கியமான வடிகால்களாகும். ஆறுகள் நமக்கு பல வழிகளில் பயன்படுகின்றன. அது வீட்டு தேவைக்கான நீரையும், நீர்ப்பாசனத்திற்கும், போக்குவரத்திற்கும் மற்றும் நீர் விளையாட்டிற்கும் தேவையான நீரை தருவதுடன், மலைகளிலிருந்து வண்டல் படிவுகளை சமவெளிகளிலும் டெல்டா பகுதிகளிலும் படிய வைக்கிறது. இப்பகுதிகளில் உள்ள வண்டல் மண் ஒவ்வொரு முறையும் வெள்ளப் பெருக்கு ஏற்படும்போதும் புதுப்பிக்கப்படுகிறது. எனவே ஆறுகள் மனித இனத்திற்கும் மற்ற உயிரினங்களுக்கும் மிகப் பெரிய வரமாக கருதப்படுகிறது.


## ஆறுகளின் பிறப்பும், அமைவிடமும்

மலைகள் மிக அதிகமாக மழையைப் பெறுகின்றன. இதனால் பெரும்பாலான ஆறுகள் அங்கு உருவாகி கிளை ஆறுகளுடன் சேர்ந்து முதன்மை ஆறாக உருவாகி, அவைகள் வெவ்வேறு இடங்களில் அதன் போக்கில் கடலில் கலக்கின்றன. இதில் முதன்மையானவை ஆறு என்றும் மற்றவை கிளை ஆறுகள் என அழைக்கப்படுகிறது. இவை ஒன்று சேர்ந்து ஆறுகளின் அமைப்பாகிறது. வடிகால் அமைப்பு நிலத்தின் சரிவு, நில அமைப்பு, நீரின் கொள்ளவு, நீரின் வேகம் இவற்றைப் பொறுத்து கடலிலோ அல்லது உள்நாட்டு ஏரிகளிலோ கலக்கிறது.

## உள்நாட்டு வடிகால்

ஆரவல்லி மலைத் தொடருக்கு மேற்கே உள்நாட்டு வடிகால் காணப்படுகிறது. இப்பகுதியில் லூனி ஆறு ஓடுகிறது. இந்த ஆறு ஆஜ்மீருக்கு தென்மேற்கே ஆரவல்லி மலைத் தொடரில் உருவாகிறது. இவ்வாறு கோவிந்கார்க் என்னுமிடத்தை கடந்து சரஸ்வதி ஆற்றுடன் கலக்கிறது. இந்த சரஸ்வதி ஆறு புஸ்கர் ஏரியில் உருவாகிறது. இதற்கு இரண்டு துணை ஆறுகள் உள்ளன. அவை ஆரவல்லி மலைத்தொடரில் உருவாகிறது. இவை சுக்ரி நதி மற்றும் ஜவ்வாய் நதி ஆகும். 320 கி.மீ ஓடிய பின் லூனி ஆறு குஜராத்தின் கட்ச் பகுதியில் உள்ள ரானின் தலைப்பகுதியில் உள்ள சதுப்பு நிலப்பகுதியில் மறைகிறது. இந்த ஆறு வறண்ட தெற்கு ராஜஸ்தான் பகுதிக்கு மிகவும் நன்மை அளிக்கிறது. லூனி ஆற்றின் நீர் பாலோட்டிரா வரை சுவையாக இருந்த போதிலும், ரான்ஆப்கட்ச் பகுதியில் உப்புத்தன்மையுடன் காணப்படுகிறது.

# இந்திய ஆறுகள்



வ
மே
கி
தெ
சிந்து
சிந்து
ஜீலம்
செனாப்
ராவி
சட்லஜ்
பியாஸ்
கோவிந்த் சாகர்
சாங்போ
கங்கை
யமுனை
சாரதா
காக்ரா
கண்டக்
கோசி
பிரம்மபுத்ரா
சம்பல்
ராணா பிரதாப் சாகர்
காந்தி சாகர்
பெட்வா
சோன்
கங்கை
கோவிந்த வல்லப பந்த் சாகர்
நர்மதை
தபதி
மகாநதி
பென்கங்கா
கோதாவரி
சில்கா ஏரி
நிஜாம் சாகர்
கிருஷ்ணா
நாகார்ஜுன சாகர்
கொல்லேறு ஏரி
துங்கபத்திரை
லிங்கனாமக்கி நீர்த் தேக்கம்
கிருஷ்ணராஜ சாகர் நீர்த்தேக்கம்
புலிகாட் (பழவேற்காடு) ஏரி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
காவிரி
வேம்புநாடு ஏரி
இலட்சத் தீவுகள்
இலங்கை
அந்தமான் – நிக்கோபார் தீவுகள்
இந்தியப் பெருங்கடல்

# இந்தியா ஆறுகள்

| பெயர் | நீளம் கி.மீ | பரப்பு ச.கி.மீ | ஆற்றின் பிறப்பிடம் | கலக்குமிடம் | பயனடையும் பகுதி |
|---|---|---|---|---|---|
| சிந்து | 3100 | 3,21,290 | கைலாஷ் மலைத் தொடர் | அரபிக்கடல் | இந்தியா, பாகிஸ்தான் |
| கங்கை | 2480 | 3,37,000 | கங்கோத்ரி | வங்காளவிரிகுடா | உத்திரப்பிரதேசம், பீகார், மேற்குவங்கம் |
| யமுனை | 1370 | 3,59,000 | யமுனோத்ரி | வங்காளவிரிகுடா | டெல்லி, ஹரியானா, உத்திரப்பிரதேசம் |
| பிரம்மபுத்ரா | 725 | 2,40,000 | ஆங்சி பனியாறு மானசரோவர் ஏரி | வங்காளவிரிகுடா | வடகிழக்கு மாநிலங்கள் |
| காவிரி | 800 | 87,900 | குடகுமலை | வங்காளவிரிகுடா | கர்நாடகம், தமிழ்நாடு |
| கோதாவரி | 1465 | 3,12,812 | நாசிக்குன்றுகள் | வங்காளவிரிகுடா | ஆந்திரப்பிரதேசத்தின் தென்கிழக்குப் பகுதி, ஒடிசா |
| கிருஷ்ணா | 1400 | 2,59,000 | மகாபலேஸ்வரர் மலை | வங்காளவிரிகுடா | மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் |
| நர்மதை | 1312 | 98,796 | அமர்கண்டாக் மலை | அரபிக்கடல் | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா |
| தபதி | 724 | 65,145 | பெட்டூல் | அரபிக்கடல் | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா |
| மகாநதி | 858 | 1,41,600 | அமர்கண்டா பீடபூமி | வங்காளவிரிகுடா | சட்டிஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா |
| வைகை | 240 | 7,000 | மேற்குதொடர்ச்சி மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு |
| பெரியாறு | 244 | 5,398 | கார்டமன் மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு, கேரளா |
| தாமிரபரணி | 123 | 4400 | அகத்தியர் மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு |

## இமயமலை ஆறுகளுக்கும் தீபகற்ப ஆறுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்

| இமயமலையில் உருவாகும் ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|
| இமயமலையில் உருவாகும் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகள் பனி உறைந்த மலைகளில் உருவாகின்றன. | தீபகற்ப ஆறுகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதை மற்றும் தபதி ஆறுகள் தீபகற்ப பீடபூமியில் உள்ள மலைகளில் இருந்து உருவாகின்றன. |
| இவை பெரிய ஆற்று வடிநிலங்களையும், நீர்பிடிப்புகளையும் கொண்டவை. | இவை சிறிய நீர்பிடிப்புகளையும் சிறிய ஆற்று வடி நிலங்களையும் கொண்டவை. |
| இவை ஆழமான 'ஐ' வடிவ குறுகியபள்ளத்தாக்குகள் வழியாக பாய்கின்றன. | இவை அகலமாக ஆழமற்ற பள்ளதாக்குகள் வழியே பாய்கின்றன. |
| இந்த ஆறுகள் வற்றாத ஆறுகளாகும். இவை பருவமழையிலிருந்தும் பனி உருகுவதாலும் நீரைப் பெறுகின்றன. | இந்த ஆறுகள் பருவ காலங்களில் மட்டுமே ஓடுகின்றன. பருவமழையை நம்பியே நீரைப் பெறுகின்றன. |
| இவைகள் வற்றாத ஆறுகளாக இருப்பதால் நீர் பாசனத்திற்கு உதவுகின்றன. | பருவமழையிலிருந்து நீரைப் பெறுவதால் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுவதில்லை. |
| இவைகள் சமவெளியில் ஓடுவதால் போக்குவரத்திற்கு உதவுகின்றது. | இவை சீரற்ற பீடபூமியில் ஓடுவதால் போக்குவரத்திற்கு பயன்படுவதில்லை. |
| கங்கை–பிரம்மபுத்திரா ஆறுகள் ஆற்றுமுகத்துவாரத்தில் பெரிய வண்டல் டெல்டாக்களை உருவாக்குகிறது. | மேற்கு நோக்கி ஓடும் ஆறுகள் சிறிய கழிமுகங்களையும் சிறிய டெல்டாக்களையும் உருவாக்குகின்றன. |

| | |
|---|---|
| துணை ஆறுகள் (Tributary) | ஒரு ஆறானது அருகிலுள்ள மலைப்பகுதியில் உருவாகி அது முதன்மை ஆற்றுடன் ஒன்று சேருகிறது. உதாரணமாக யமுனை ஆறு கங்கையின் துணை ஆறு. பவானி, அமராவதி, நொய்யல் ஆகிய ஆறுகள் காவிரியின் துணை ஆறுகள் |
| கிளை ஆறுகள் (Distributary) | ஒரு ஆறு அதன் கடைப்பகுதியில் கடலை சேருகின்ற பகுதிகள் முதன்மை ஆறானது பல கிளைகளாக பிரிந்து கடலில் கலக்கிறது. உதாரணம் – ஹூக்ளி ஆறு |
| டெல்டா (Delta) | ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் முக்கோண வடிவிலான வண்டல் படிவுகளை டெல்டா என்கிறோம். |
| கழிமுகம் (Estuary) | ஆற்று முகத்துவாரத்தில் ஓதங்களின் காரணமாக ஆற்றின் நல்ல நீரும் கடலின் உப்பு நீரும் ஒன்று கலக்கிறது. இப்பகுதி டெல்டாபோல் இல்லாமல் ஆழமாக இருக்கும். உதாரணம்: நர்மதை மற்றும் தபதி ஆற்றின் கழிமுகப்பகுதிகள். |